வருடாந்த அறிக்கை - 2018

உள்ளடக்கம்

1. மிகவும் சிறந்த எதிர்காலத்திற்காக அரச துறைக்கு வலுவூட்டுதல் 5
   நோக்கு 6
   பணி 6
   உபாயமுறை இலக்குகள் 6
   முக்கிய பணிகள் 6
   எமது பெறுமானங்கள் 6
   உபாயமுறை இலக்குகள் 6
   1.2 பணிப்பாளர் நாயகத்தின் ஆசிச் செய்தி 8

2. நிதித் துறையின் முக்கிய நிகழ்வுகள் 9

3. ஆளுநர் சபையின் அங்கத்தவர்கள் 12

4. சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் கல்விசார் ஊழியர் குழாம் 14
   4.1 உள்ளக கல்விசார் ஊழியர்களின் விபரம் 14
   4.2 சேவை வசதிவழங்குநர்களின் விபரங்கள் 17

5. பணிபகள் மற்றும் நிருவாகக் கட்டமைப்பு 19
   5.1 இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிக் கட்டமைப்பு 19
   5.2 இ.அ.நி.நிறுவகத்தின் நிருவாகக் கட்டமைப்பு 20

06. பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு 21
   6.1 சேவை ஆரம்பப் பயிற்சிப் பாடநெறிகள் 21
   6.2 நாடளாவிய சேவைகளுக்கான கட்டாய கற்கைகள் மற்றும் அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சிகள் 22
   6.3 டிப்ளோமா நிகழ்ச்சிகள் 23
   6.4 குறுகிய கால கற்கைகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் 24
   6.5 தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் 24
   6.6 முகாமைத்துவ ஆலோசனைகள் 27
   6.7 வெளிநாட்டுப் பயிற்சி நிறுவனங்ளில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான ஒருங்கிணைப்பு வெளிநாட்டு தனிப்பயனாக்கப்பட்ட நிகழ்ச்சிகள் 27
   6.8 பகிரங்க கருத்தரங்குகள் 27
   6.9 ஏனைய முன்னெடுப்புக்கள் 27

07. பட்டப் பின் கற்கைகள் பாடசாலை 32

08. 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகள் 34

09. தகவல் தொழில்நுட்ப நிலையம் 40

10. மொழிக் கல்வி நிலையம் 44

11. பொது நிருவாகம் 45
   11.1 மனித வள முகாமை 45
   11.2 சேவை வழங்கல் முகாமை 45

12. 2018 ஆம் ஆண்டில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் முக்கிய நிகழ்வுகள் 47

13. கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 59

01. மிகவும் சிறந்த எதிர்காலத்திற்காக அரச துறைக்கு வலுவூட்டுதல்

பொது நிருவாகத்திற்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனமான இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் (இஅநிநி) 1982 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டது. அது அரச துறையில் நிறைவேற்றுத் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களின தொழில்சார் அபிவிருத்தி மற்றும் தேர்ச்சி மேம்பாடு என்பன தொடர்பான பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட முன்னணி தேசிய நிறுவனமாகும்.

பொது நலனுக்கான முக்கியமான பெறுமானங்களின் அடிப்படையில் நோக்குகையில் இலங்கை அபிவிருத்தி நிருவாகத்தின் முக்கிய பணி அரச துறையிலுள்ள உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வழங்குதல், அரச துறை நிறுவனங்களுக்கு முகாமைத்துவ ஆலோசனைகள் வழங்குதல், அரச உத்தியோகத்தர்களை ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஊக்கப்படுத்துதல் என்பனவாகும்.

மேலும், இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, பட்டப்பின் பட்டங்களை வழங்கும் உரிமையையும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. அதனடிப்படையில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பட்டப்பின் கற்கைகள் பாடசாலையின் ஊடாக அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் பட்டம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் டிப்ளோமா என்பன வழங்கப்படுகின்றன. இது அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் ஏனைய தரப்பினரும் ஒரே விதத்தில் தங்களது முகாமையாளர்களிடம் பெறுமதி சேர்த்த பங்களிப்பை வேண்டி நிற்கின்ற ஒரு நிலைமையில் தற்போது துரிதமாக மாற்றமடையும் சவால்கள் நிரம்பிய அரச முகாமைத்துவச் சூழலின் தேவைகளைப் பூர்த்தி செய்வதைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

பொது நிருவாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் முழுமையான வழிகாட்டலின் கீழ் உள்ள நிறுவனங்களின் கொள்கைத் தீர்மானங்களுக்கான பொறுப்பை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் கொண்டுள்ளது.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம், பயிற்சி மற்றும் ஆய்வுக்கு ஒத்துழைப்பு வழங்கும் லண்டன் சிவில் சேவைக் கல்லூரி, சிங்கப்பூர் சிவில் சேவைக் கல்லூரி, சீனாவின் பீஜிங் வெளிநாட்டுக் கற்கைகள் பல்கலைக்கழம், இந்தியாவின் லால் பஹதூர் சாஸ்திரீ தேசிய நிருவாக அகடமி, அவுஸ்திரேலியாவின் மொனர்' பல்கலைக்கழம், மாலைதீவு சிவில் சேவைப் பயிற்சி நிறுவனம், சீனாவின் "ஹுவாசோங் விஞ்ஞான, தொழில்பட்ப் பல்கலைக்கழம் போன்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடனும் பயிற்சி நிறுவனங்கள் பலவற்றுடனும் வலையமைப்பாகச் செயற்படுகின்றது. இரு தரப்பு பயிற்சி மற்றும் ஆய்வு ஒத்துழைப்புக்களைப் பேணி வருவதற்காக, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் 2018 ஆம் ஆண்டில் பின்வரும் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டது.

- பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் தேசிய அரச கொள்கைகள் பாடசாலை
- இந்தியாவின் ஐதராபாத் அரச முயற்சியாண்மை நிறுவனம்

கடந்த 36 ஆண்டு காலப் பகுதியில் அறிவு மேம்பாடு, திறன் விருத்தி, ஒழுங்கமைப்பு அபிவிருத்தி மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளுதல் ஆகிய துறைகள் உள்ளிட்டதாக பரந்த விடயப் பரப்பொன்றில் சேவை வழங்கலில் ஈடுபட்டு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் ஒரு சக்திவாய்ந்த நிறுவனமாக வளர்ச்சி கண்டுள்ளது.

நோக்கு

"ஆசியாவின் அரச துறையில் கற்றல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான அதிசிறந்த நிலையமாக மாற வேண்டும்" என்பதே இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் தொலைநோக்காகக் காணப்படுகின்றது.

பணி

கற்றல் மற்றும் அபிவிருத்தி, ஆலோசனைச் சேவைகள் மற்றும் ஆராய்ச்சிகள் மூலம் புத்தாக்கம் கொண்ட, எதிர்கால நோக்கு மற்றும் குடிமக்களை மையமாகக் கொண்ட சேவையினை தொடர்ந்தேர்ச்சியாக விருத்தி செய்யும் வகையில் வசதிகளை வழங்குதல்.

மூலோபாய இலக்குகள் -

- வினைத்திறன் மிக்க மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த அரச சேவையினை நிறுவும் வகையில் தேசிய அபிவிருத்திற்கான இலக்கிற்கு பங்களிப்பினை வழங்குதல்.
- தேசிய மட்டத்திலான கொள்கை அபிவிருத்திற்கு பங்களிக்கும் வகையில் முன்னணி வகிபாகத்தினை வகித்தல்.
- சுய கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு அதிகமான கேள்விகளை உருவாக்கும் வகையில் அதன் பங்குதாரர்களினுள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் தொடர்பான நேர்மறையான படத்தினைக் கட்டியெழுப்புதல்.
- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவினுள் அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அபிவிருத்தியின் பொருட்டாக அமையும் ஒத்துழைப்பு வழங்கும் மையமாக விளங்குதல்.

முக்கிய பணிகள் -

- கற்கை மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக அரச துறையில் உள்ள முகாமைத்துவ பணியாட்தொகுதியினரின் இயலளவினை கட்டியெழுப்புதல்.
- முதுகலைமானிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் அரச துறை அலுவலர்களின் அறிவினை விருத்தி செய்தல்.
- அரச கொள்கை மற்றும் முகாமைத்துவத்துக்கு உரித்தான இலக்குடைய ஆராய்ச்சிக் கற்கையினை உள்ளடக்கிய களஞ்சியமொன்றினை விருத்தி செய்தல்.
- அரச துறை நிறுவனங்கள் மற்றும் அரசுக்கு உரித்தான தொழில்முனைவோர் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை விருத்தி செய்யும் வகையில் அமைப்பு ரீதியான அபிவிருத்திச் சேவைகளை நடாத்திச் செய்தல்.
- அரச துறைக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகள் மற்றும் மொழித் தேர்ச்சிப் பரீட்சைகளை நடாத்துதல்.

எமது பெறுமானங்கள் -

- சிறப்புத் தன்மை, அர்ப்பணிப்பு, பன்முகத்தன்மை, பொறுப்பு, நிலைத்திருக்கும் தன்மை

மூலோபாய நோக்கம் -

- "மிகச் சிறந்த நாளை நாளிற்காக இலங்கையை உருவாக்கும் வகையில் அரச துறையினை பலப்படுத்துதல்"

1.1 பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் மற்றும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் ஆளுநர் சபைத் தலைவரின் ஆசிச் செய்தி



இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கைக்கு இந்த ஆசிச் செய்தியை அனுப்பக் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். அரச துறையின் முகாமைத்துவ மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களின் பயிற்சிக்காகக் காணப்பட்ட அதி உயர் நிறுவனம் என்ற வகையில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் மிகத் தெளிவான பல சாதனைகளுடன் மீளாய்வாண்டினுள் தனது பணியினை நிறைவேற்றியுள்ளது.

பணி ஒப்படைப்புக்களில் நாடளாவிய சேவைகளுக்கான சேவை ஆரம்பப் பயிற்சி மற்றும் திறன் விருத்திப் பயிற்சி என்பன முதன்மையானவையாக விளங்குகின்றன. அதனடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் பொது நலனுக்கான உத்வேகத்துடன் மக்கள் நட்புறவான தொழில்சார் நிலைமையைப் பேணி வருவதற்காக அரச துறைக்குப் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்ப்பட்ட ஊழியர்களை திசைப்படுத்தும் நோக்கில் இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை பொறியியல் சேவை மற்றும் இலங்கை கட்டடக் கலைஞர் சேவை என்பவற்றுக்கான மூன்று சேவை ஆரம்பப் பயிற்சிகள் நடாத்தப்பட்டன.

இந்த வருடத்தில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் அரசாங்க ஊழியர்களுக்கும் உதவி விதத்தில் மாவட்டத்தினுள் நடமாடும் பயிற்சி நிகழ்ச்சிகளை ஆரம்பித்ததை மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். மேலும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினுள் ஆய்வு நிலையமொன்று தாபிக்கப்பட்டமையும் நீண்ட காலமாக நிலவிய தேவையொன்றைப் பூர்த்தி செய்ததது. அரச முகாமைத்துவக் கோட்பாடுகளுக்கும் நடைமுறைகளுக்கும் இடையில் காணப்படும் முரண்பாடுகளைத் தீர்க்கும் போது ஆய்வுகளின் மூலம் பெற்றுக்கொள்ளும் தகவல்கள் பெரிதும் உதவுவதனால் சேவை வழங்கலுடன் தொடர்புடைய ஆய்வுகளை நடாத்துவது மிகவும் முக்கியமானதாகும். நிறுவனங்களினுள் சேவை வழங்கல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான தீர்வுகளைத் தேடுவதில் ஆர்வம் காட்டும், பல்வேறு அரச நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள், தங்களது ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இந்த நிலையத்தைப் பயன்படுத்த முடியும். இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பட்டப் பின் கற்கைகள் பாடசாலையின் முகாமையாளர்களின் நடுத்தர மட்டத்திலான தொழில்சார் தன்மையை அபிவிருத்தி செய்வதற்காக அரச முகாமைத்துவம் தொடர்பான உயர் தரத்திலான பட்டப் பின் பாடநெறியொன்று நடாத்தப்படுவதுடன் 2018 ஆம் ஆண்டில் அதற்கு புதிய தொகுதியொன்று சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

மீளாய்வாண்டில் உரிய இலக்குகளை அடைவதற்காக செய்து கொடுக்கப்பட்ட பெறுமதியான அறிவுறுத்தல்கள் தொடர்பில் பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் கௌரவ ரஞ்சித் மத்தும பண்டார அவர்களுக்கும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் ஆளுநர் சபை உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் இலக்குகளை அடைவதற்காக வழங்கிய அர்ப்பணிப்புக்காக இதன் பணிப்பாளர் நாயகத்திற்கும் ஊழியர் குழாத்திற்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். மேலும் இவ்வருடத்தில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் முன்னேற்றத்திற்காக தமது பங்களிப்பை வழங்கிய அனைவருக்கும் மகிழ்ச்சியும் சுபீட்சமும் நிறைந்த எதிர்காலம் அமைய வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்,
பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
தலைவர்,
ஆளுநர் சபை,
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

1.2 பணிப்பாளர் நாயகத்தின் ஆசிச் செய்தி



மீளாய்வாண்டு பல கோணங்களில் நோக்குகையில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்திற்கு மிகவும் முக்கியமான ஒரு வருடமாக உள்ளதுடன் இக்காலப் பகுதியில் நாங்கள் முக்கியமான சில வெற்றிகளை அடைந்துள்ளோம். அவற்றில் மிக முக்கியமான வெற்றி, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் பசுமையான உலக நோககிய பயணத்திற்காக பசுமை எரிசக்தி விருதை வென்றமையாகும். அதிமேதகு சனாதிபதி அவர்களினதும் பொதது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் கௌரவ ரஞ்சித் மத்தும பண்டார அவர்களினதும் பங்கேற்பின் மூலம் மெருகூட்டப்பட்ட ஒரு விழாவில் இலங்கைக்கான ஜேர்மனியத் தூதரகம் மற்றும் ஜீஐஇஸட் நிறுவனம் என்பவற்றினால் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்திற்கு அந்த விருது வழங்கப்பட்டது.

அந்த வருடத்திலேயே 2018 ஆம் ஆண்டுக்கான சுற்றாடல் விருதையும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் வென்றது. அரசாங்கத்தின் மீள்சுழற்சி செய்யக்கூடிய எரிசக்தி மற்றும் எரிசகத்தி வினைத்திறன் வலையமைப்பு செயற்திட்டத்துடன் இணைந்த வகையில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினாலும் தனது பசுமை முன்னெடுப்புக்காக ஒரு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டது. இலங்கைக்கான ஜேர்மனியத் தூதுவர் உள்ளிட்ட அதிதிகள் பலர் இந்நிகழ்வில் பங்கேற்றனர். சேவைகள் மற்றும் உற்பத்திகள் பிரிவின் கீழ் 2018 ஆம் ஆண்டில் தேசிய உற்பத்தித்திறன் விருதுக்கான போட்டிகளில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக மூன்றாம் இடத்தைப் பெற்றது.

அரச ஊழியர்களின் தேவையான தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கான அடிப்படைப் பணிகளை நிறைவேற்றி இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் வெளிநாட்டுப் பயிற்சிச் சுற்றுலாவொன்றையும் உள்ளடக்கிய 9 டிப்ளோமா பாடநெறிகளுக்கு மேலதிகமாக 964 பங்குபற்றுநர்களுக்காக 29 பாடநெறிகள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன. மேலும், 1281 பங்குபற்றுநர்களுக்காகத் தேவைக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்ட 43 பயிற்சிநெறிகள் நடாத்தப்பட்டதுடன் வருடத்தினுள் 17 குறுகிய கால அட்டவணைப்படுத்தப்பட்ட பாடநெறிகளும் நடாத்தப்பட்டன. அத்துடன் வாடிக்கையாளர் நிறுவனங்களின் கோரிக்கையின் பேரில் இரண்டு ஆலோசனைச் சேவைகளும் வழங்கப்பட்டன. 2017-2021 உபாய முறைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள புதிய செயற்பாடொன்றை நடைமுறைப்படுத்தி, மாவட்ட செயலகங்களின் சேவை வழங்கலின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக மாவட்ட மட்டத்தில் 5 நடமாடும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

வருடத்தினுள் அரச முகாமைத்துவ பட்டப் பின் பாடநெறிக்காக 82 பங்குபற்றுநர்களைக் கொண்ட புதிய குழுவொன்று இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பட்டப் பின் கற்கைப் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அரச துறையிலும் தனியார் துறையிலும் நிறைவேற்று மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களின் தொழிற் தேர்ச்சிகளை விருத்தி செய்யும் நோக்கில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அறிஞர்களின் பங்கேற்புடன் பட்டப் பின் கற்கைப் பாடசாலையின் ஊடாக பகிரங்க சொற்பொழிவுத் தொடர் ஒன்றும் ஏற்பாடு செய்யப்படடது.


இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினுள் ஆய்வு நிலையமொன்று தாபிக்கப்பட்டமை இவ்வருடத்தினுள் கிடைத்த மற்றொரு வெற்றியாகும். அது நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட ஒரு குறிக்கோளை நிறைவேற்றியது. ஆய்வுகளின் தகவல்களின் அடிப்படையில் கொள்கைகளை வகுப்பதும் அவற்றை நடைமுறைப்படுத்துதலும் மிகவும் பயனுள்ளது என்பதைக் கவனத்தில் எடுத்து அரச கொள்கைகள் மற்றும் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய ஆய்வுகளை நடாத்துவது ஊக்குவிக்கப்பட்டதுடன் தேவையான வசதிகளும் வழங்கப்பட்டன.


மேலே குறிப்பிட்ட வெற்றிகளை அடைவதற்காக வழியமைத்து சவால்களை முறியடிப்பதற்காக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் ஒட்டுமொத்த ஊழியர் குழாமும் வழங்கிய பங்களிப்பு, அர்ப்பணிப்பு, ஒத்துழைப்பு என்பவற்றை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அதற்காக அவர்களுக்கு நான் நன்றிக் கடன் செலுத்த வேண்டும். இறுதியாக, எமக்குத் தேவையான வழிகாட்டல்களை, ஆலோசனைகளை, வசதிகளை வழங்கியமைக்காக பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சருக்கும், ஆளுநர் சபைக்கும் அதேபோன்று எமது அனைத்து தரப்பினருக்கும் அமைச்சின் ஊழியர் குழாத்திற்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


கே.எம்.எஸ்.டி. ஜயசேகர
பணிப்பாளர் நாயகம்


02. நிதித் துறையின் முக்கிய நிகழ்வுகள்


நிதி விவரணம்	2018	2017	2016
திறைசேரியின் பங்களிப்பு	133,612,634.00	134,878,943.00	158,292,480.00
ஏனைய வருமானங்கள்	168,727,683.00	227,819,603.00	206,195,096.00
மொத்த வருமானம்	302,340,317.00	362,698,546.00	364,487,576.00
மொத்தச் செலவுகள்	318,768,799.00	346,657,892.00	290,412,354.00
மேலதிகம்/ பற்றாக்குறை	(16,428,481.00)	16,040,653.00	74,075,222.00
மொத்தச் சொத்துக்கள்	884,324,572.00	783,118,911.00	809,841,449.00
மொத்தப் பொறுப்புக்கள்	224,994,820.00	179,600,089.00	254,292,080.00
மொத்த தேறிய சொத்துக்கள்/உரிமையாண்மை	659,329,751.00	603,518,821.00	555,549,369.00












Rent
Millions
20.00
15.00
10.00
5.00
-
11.77
8.52
16.41
2016
2017
2018



School of Post Graduate Studies
Millions
25.00
20.00
15.00
10.00
5.00
-
24.22
20.68
17.49
2016
2017
2018



Income on Investments
Millions
35.00
30.00
25.00
20.00
15.00
10.00
5.00
-
23.82
31.94
31.86
2016
2017
2018



Consultancy
Millions
150.00
100.00
50.00
-
113.01
137.48
33.81
2016
2017
2018



Hire of Halls
Millions
20.00
15.00
10.00
5.00
-
4.34
6.37
18.55
2016
2017
2018


Language Programme
Millions
14.00
12.00
10.00
8.00
6.00
4.00
2.00
-
12.49
7.10
10.88
2016
2017
2018


Interest from Loans
Millions
0.70
0.65
0.60
0.55
0.50
0.56
0.63
0.67
2016
2017
2018


Total Revenue
Millions
400.00
350.00
300.00
250.00
200.00
150.00
100.00
50.00
-
364.51
358.85
302.34
2016
2017
2018


Total Expenses
Millions
360.00
340.00
320.00
300.00
280.00
260.00
290.41
346.66
318.77
2016
2017
2018


Surplus/ (deficit) for the period
Millions
80.00
60.00
40.00
20.00
-
(20.00)
(40.00)
74.10
16.04
(16.43)
2016
2017
2018

03. ஆளுநர் சபையின் அங்கத்தவர்கள்

1982 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகச் சட்டத்தின் பிரிவு 6 (1) இற்கு இணங் பொது நிருவாக அமைச்சரினால் பின்வரும் ஆட்கள் 2018 ஆம் ஆண்டுக்காக நிறுவனத்தின் ஆளுநர் சபைக்கு நியமிக்கப்பட்டனர்.



திரு. ஜே.ஜே. ரத்னசிரி
தலைவர்

செயலாளர்
(2018.01.01 முதல் 2018.05.21 வரை)

பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு



திரு. பத்மசிரி ஜயமான்ன
தலைவர்
செயலாளர்
(2018.05.22 முதல் 2018.12.31 வரை)
பொது நிருவாக, முகாமைத்துவ, சட்டம் மற்றும்
ஒழுங்கு அமைச்சு



திரு. சமன் ஏகநாயக
அங்கத்தவர்

பிரதம மந்திரியின்
செயலாளர்

பிரதம மந்திரியின்
அலுவலகம்



திரு. எஸ்.ரீ. கொடிகார
அங்கத்தவர்

செயலாளர்

உள்நாட்டலுவல்கள்
அமைச்சு



திரு. சீ. திஸாநாயக
அங்கத்தவர்
செயலாளர்
(2018.01.01 முதல் 2018.05.21 வரை)
உயர் கல்வி அமைச்சு



திரு. ஜே.ஜே. ரத்னசிரி
அங்கத்தவர்

செயலாளர்
(2018.05.22 முதல் 2018.12.31 வரை)

உயர் கல்வி மற்றும்
நெடுஞ்சாலைகள் அமைச்சு



திரு. எச்.ரீ. கமல் பத்மசிரி
அங்கத்தவர்
செயலாளர்
மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு



திரு. பி.பீ.எஸ்.சீ. நோனிஸ்
அங்கத்தவர்

கட்டுப்பாட்டாளர் நாயகம்

நிதி மற்றும் வெகுசன
ஊடக அமைச்சு



திரு சாரன் அமரதுங்க
அங்கத்தவர்
முகாமைத்துவ ஆலோசகர்



திரு. டி.ஏ. விஜித்
மஹேந்திர ரத்னசேகர
அங்கத்தவர்



திரு. எஸ். சுரேஃ சீ
பெர்னாண்டோ

அங்கத்தவர்



திருமதி வசந்தா பெரேரா
அங்கத்தவர்

பணிப்பாளர் நாயகம்
இ.அ.நி.நி.
(2018.01.01 முதல்
2018.09.27 வரை)



திரு. எம்.எஸ்.டி. ஜயசேகர
அங்கத்தவர்

பணிப்பாளர் நாயகம் (ப.க)
இ.அ.நி.நி.

(2018.09.28 முதல்
2018.12.31 வரை) 31.12.2018

04. சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் கல்விசார் ஊழியர் குழாம்

திருமதி வசந்தா பெரேரா

பணிப்பாளர் நாயகம் (2018.01.01 முதல் 2018.09.27 வரை)

இ.நி.சே. விசேட தரம்

செயற்திட்ட முகாமைத்துவ விஞ்ஞான முதுமானி, தொழில்நுட்ப விஞ்ஞானப் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா

பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கலாநிதிப் பட்டம், கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கலாநிதிப் பட்டம், முகாமைத்துவப் பட்டப் பின் கற்கைகள் நிறுவனம், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம், இலங்கை

விஞ்ஞானமானிப் பட்டம், பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை

திருமதி கே.எம்.எஸ்.டி. ஜயசேகர

பணிப்பாளர் நாயகம் (ப.க) (2018.09.28 முதல் 2018.12.31 வரை)

மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (கற்கைகள் மற்றும் அபிவிருத்தி)

இ.நி.சே. விசேட தரம்

பொது நிருவாகப் பட்டப் பின் பட்டம், முகாமைத்துவப் பட்டப் பின் கற்கைகள் நிறுவனம், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம், இலங்கை

உபாய முறை மனித வள முகாமை, விக்டோரியா பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா

முகாமைத்துவம் தொடர்பான கலாநிதிப் பட்டம், பட்டப் பின் கற்கைகள் நிறுவனம், இலங்கை

விஞ்ஞானமானி (உயிரியல்) பட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம், இலங்கை

திருமதி ஜீ.டபிள்யு. ராஜபக்ஷ

மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (நிருவாகம் மற்றும் நிதி)

இ.நி.சே. விசேட தரம்

வியாபார நிருவாகப் பட்டப் பின் பட்டம், மொனர்' பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா

பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கலாநிதிப் பட்டம், முகாமைத்துவப் பட்டப் பின் கற்கைகள் நிறுவனம், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம், இலங்கை

சர்வதேச உறவுகள் தொடர்பான கலாநிதிப் பட்டம்,(ஆநசவை ீயளள), பண்டாரநாயக சர்வதேச கற்கைகள் நிலையம்

வியாபார முகாமை விஞ்ஞானமானி (விசேட) பட்டம் (இரண்டாம் வகுப்பு கீழ்நிலைச் சித்தி)

ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம், இலங்கை

4.1 உள்ளக கல்விசார் ஊழியர்களின் விபரம்

திருமதி என்.ஜே. ஜயசுந்தர

சிரேஷ்ட ஆலோசகர்

விஞ்ஞான முதுமானி (சுற்றாடல் பொருளியல்) தொ.ப.பி.நி. (பேராதனை)

விவசாய விஞ்ஞானமானி (கௌரவ) பட்டம் பேராதனைப் பல்கலைக்கழகம்

சுற்றாடல் முகாமை தொழில்சார் சான்றிதழ் (ஜீடீசீ. ஜேர்மன்

திரு. டபிள்யு.எம்.எம்.ஜீ.டி. விஜேகோன்

சிரேஷ்ட ஆலோசகர்
விஞ்ஞானமானி (நகரப்புற சுற்றாடல் முகாமைத்து) ஏஜரீ- தாய்லாந்து
முதுகலைமானி (கௌரவ), புவியியல், கொழும்புப் பல்கலைக்கழகம்

திரு. ஏ. லொகுகமகே

சிரேஷ்ட ஆலோசகர்
இ.க.சே (தரம் ஐ)
முதுகலைமானி (நிதிப் பொருளாதார விஞ்ஞானம்), கொழும்புப் பல்கலைக்கழகம்
கலாநிதிப் பட்டம் (பொருளாதார அபிவிருத்தி)
கலாநிதிப் பட்டம் (கூட்டிணைவு மற்றும் உபாய முறை நிதியீட்டம்)
ர்னுயு, னுகுஆ, னுஜீஊயு, னுனி ை ஐவு, ஆயுயுவு

கலாநிதி எஸ்.ஆர்.எஸ்.என். சுதசிங்ஹ

மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (ப.பி.டி.பா) பதில் கடமை
சிரேஷ்ட ஆலோசகர், கற்கை ஒருங்கிணைப்பாளர் - பட்டப் பின் கற்கைப் பாடசாலை
அபிவிருத்தி நிருவாகம் தொடர்பான கலாநிதிப் பட்டம், (அரச கெர் முகாமைத்துவம் பற்றிய சிறப்பு)
விஞ்ஞான முதுமானி (பொருளியல்), கொழும்புப் பல்கலைக்கழகம்
பொருளாதார அபிவிருத்தி தொடர்பான பட்டப் பின் பட்டம், கொழும்புப் பல்கலைக்கழகம்
கலைமானி (கௌரவ), ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்

திரு. ஏ.பீ.எம். அஷ்ரப்

சிரே'ட ஆலோசகர் 2018.01.01 முத் 2018.04.08 வரை)
இ.நி.சே. தரம் ஐ
மனித வள முகாமை பட்டப் பின் பட்டம்
கொழும்புப் பல்கலைக்கழகம்
முதுகலைமானி (கௌரவ)பேராதனைப் பல்கலைக்கழகம்

திருமதி ஆர். திஸாநாயக - வழக்கறிஞர்

சிரே'ட ஆலோசகர்
இ.நி.சே (தரம் ஐ)
சத்தியப் பிரமாண ஆணையாளர்
விஞ்ஞான முதுமானி அரச முகாமைத்துவம் (செயற்திட்ட முகாமை)
சர்வதேச உறவுகள் தொடர்பான கலாநிதிப் பட்டம்
சட்டவாதி, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
விஞ்ஞானமானி (கௌரவ), களனிப் பல்கலைக்கழகம்
னுஜீஊயு.

திருமதி ரீ. அபேவர்தன

சிரேஷ்ட ஆலோசகர்

இ.நி.சே (தரம் ஐ)

சர்வதேச உறவுகள் பட்டப் பின் பட்டம், ஐஊரு, டோக்கியோ, ஜப்பான்

வியாபார முகாமைத்துவ பட்டப் பின் பட்டம், பேராதனைப் பல்கலைக்கழகம்

சூழலியல் பட்டப் பின் பட்டம், பேராதனைப் பல்கலைக்கழகம்

நல்லாட்சி பற்றிய கலாநிதிப் பட்டம்,பட்டப் பின் கற்கை நிறுவனம், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்

விலங்கியல் விஞ்ஞானமானி (சிறப்பு) பட்டம், பேராதனைப் பல்கலைக்கழகம்

பொது நிருவாக டிப்ளோமா, இ.அ.நி.நி.

திரு. கே.ஆர். கங்கெதர

சிரே‘ட ஆலோசகர்

இ.நி.சே (தரம் ஐ)

விஞ்ஞான முதுமானி, சர்வதேச மற்றும் அபிவிருத்திப் பொருளியல் பட்டம், (வயவமயா - அவுஸ்திரேலியா)

விஞ்ஞானமானி புவியியல் பட்டம், பேராதனைப் பல்கலைக்கழகம்

பொது நிருவாக டிப்ளோமா, இ.அ.நி.நி.

திரு. என்.ஐ. லியனகே

சிரே‘ட ஆலோசகர் (2018.01.01 முதல் 2018.02.21 வரை)

இ.நி.சே (தரம் ஐ)

ஆீஆ (ஆநடடிழரசநெ), யுரளவசயடயை

அபிவிருத்தித் திட்டமிடல் கலாநிதிப் பட்டம், ரூஹணுப் பல்கலைக்கழகம்

விஞ்ஞானமானி பொறியியல் (சிறப்பு) பட்டம்)

திரு. எம்.எஸ். அநுருத்த

சிரே‘ட ஆலோசகர் (2018.02.28 முதல்)

இ.க.சே (தரம் ஐ)

முதுகலைமானி பொருளியல் பட்டம், களனிப் பல்கலைக்கழகம்

வியாபார நிருவாக முதுமானி, இராஜரட்டை பல்கலைக்கழம்

சர்வதேச உறவுகள் தொடர்பான கலாநிதிப் பட்டம், பண்டாரநாயக சர்வதேச கற்கைகள் நிலையம்

விஞ்ஞானமானி (கௌரவ) சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்

திரு. எஸ்.டி.என்.யூ. சேனாதீர

சிரே**ஷ்**ட ஆலோசகர் (2018.12.07 முதல்)

பொது நிருவாகப் பட்டப் பின் பட்டம், /பிலின்டர்ஸ் பல்கலைக்கழகம், அடிலேட், அவுஸ்திரேலியா

மொழியியல் பட்டப் பின் பட்டம், களனிப் பல்கலைக்கழகம்

கலைமானிப் பட்டம், பேராதனைப் பல்கலைக்கழகம்

திரு. என்.எம்.எஸ்.ஏ. பண்டார

ஆலோசகர்

தகவல் தொழில்நுட்ப விஞ்ஞான முதுமானி, மொரட்டுவைப் பல்கலைக்கழகம்

விஞ்ஞானமானி ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம், வனவியல் விஞ்ஞான முதுமானிப் பட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்

திருமதி எம்.ஆர். வக்கும்புர

ஆலோசகர் (2018.01.01 முதல் 2018.09.03 வரை)

சமாதான மற்றும் முரண்பாட்டுக் கல்வி முதுமானிப் பட்டம், ஒஸ்லோ பல்கலைக்கழகம், நோர்வே

முதுகலைமானி (கௌரவ) - சர்வதேச உறவுகள், கொழும்புப் பல்கலைக்கழகம்

மனித உரிமைகள் டிப்ளோமா, மனித உரிமைகள் நிறுவனம், இலங்கை

சமாதான ஆய்வுப் பட்ட நிகழ்ச்சி, ... மற்றும் ஒஸ்லோ பல்கலைக்கழகம், நோர்வே,

திரு. எம்.ஆர். பெரேரா

உதவி ஆலோசகர்

செயற்கை அறிவு விஞ்ஞான முதுமானி, மொரட்டுவைப் பல்கலைக்கழகம்

தகவல் தொழில்நுட்ப இளமானி, கொழும்புப் பல்கலைக்கழகம்

4.2 சேவை வசதிவழங்குநர்களின் விபரங்கள்

திரு. டி.எஸ். பத்மசிரி

பணிப்பாளர் (நிதி)

இ.க.சே (தரம் ஐ)

அரச நிருவாக விஞ்ஞானமானி (கௌரவ)

திரு. கே. பிரசன்ன சந்தித்

பணிப்பாளர் (நிருவாகம்)

இ.நி.சே (தரம் ஐ)

பொது நிருவாக முதுமானி, இராஜரட்டை பல்கலைக்கழம்

விஞ்ஞானமானிப் பட்டம், பேராதனைப் பல்கலைக்கழகம்

நிலைபேறான அபிவிருத்தி கல்வி டிப்ளோமா ரூரியளயடயருளைநசளவைல ஸ்வீடன்

அரச முகாமை தொடர்பான டிப்ளோமா (ஸ்வீடன்)

திரு. ஜே.எஸ்.பீ. பியசேன

பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிகழ்ச்சி ஊக்குவிப்பு)

இ.நி.சே (தரம் ஐ)

சமூகவியல் பட்டப் பின் பட்டம், களனிப் பல்கலைக்கழகம்

விஞ்ஞானமானி பிரயோக விஞ்ஞானப் பட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்

திருமதி. ஆர்.ஏ.எஸ்.பீ. ரணவீர

பதிவாளர், பட்டப் பின் டிப்ளோமா (ஐனெ. ஆயவாநஅயவஅைஎள)

விஞ்ஞானமானி (கௌரவ)

திருமதி ரீ.எஸ். கரஸ்ணாகொட

உதவிப் பணிப்பாளர் (பரீட்சைகள்) (2018.01.01 முதல் 2018.12.03 வரை)

இ.நி.சே.

சேவை முகாமை பட்ட டிப்ளோமா

விஞ்ஞானமானி (விஞ்ஞானம்)

பொது நிருவாக, டிப்ளோமா

திருமதி ரீ.டி. நாரங்கொட

உள்ளகக் கணக்காய்வு

முதுகலைமானி (பொருளியல்), களனிப் பல்கலைக்கழகம்

சான்றிதழ் பெற்ற கணக்காளர் நிறுவனத்தின் வியாபார மற்றும் நிதி நிருவாகப் பட்டப் பின் டிப்ளோமா டீடீஆவப. மனித வள (கௌரவ)

திருமதி பி.ஏ.ஜீ. பாலசூரிய

நூலகர்

நூலக மற்றும் தகவல் விஞ்ஞான பட்டப் பின் பட்டம்

கலைமானி, களனிப் பல்கலைக்கழகம்

முகாமைத்துவ டிப்ளோமா, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

திருமதி எஸ்.எல்.ஐ. சமரவிக்ரம

உதவிப் பதிவாளர்


முதுகலைமானி (பொருளியல்), களனிப் பல்கலைக்கழகம்

விஞ்ஞானமானி மனித வள முகாமை சிறப்பு பட்டம்


ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்

05. பணிபகள் மற்றும் நிருவாகக் கட்டமைப்பு

5.1 இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிக் கட்டமைப்பு



5.2 இ.அ.நி.நிறுவகத்தின் நிருவாகக் கட்டமைப்பு



06. பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

இலங்கையின் அரச துறையிலுள்ள நிறைவேற்று உத்தியோகத்தர்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் 1982 ஆம் ஆண்டில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் தாபிக்கப்பட்டது. கற்கைகள் மற்றும் அபிவிருத்தி இவற்றில் முக்கிய பகுதியாக உள்ளதுடன் அவற்றின் மூலம் அரச துறையிலுள்ள உத்தியோகத்தர்களின் திறன் விருத்தித் தேவைகளையப் பூர்த்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்ட கற்கை மற்றும் அபிவிருத்திச் சேவைகள் இதன் மூலம் வழங்கப்படுகின்றன. இந்தப் பணிகளுக்காக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் அரச துறை நிறுவனங்களினதும் அவற்றின் முகாமைத்துவ ஊழியர்களினதும் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்காகப் பின்வரும் செயற்பாடுகை மேற்கொள்கின்றது.

1. பின்வரும் நாடளாவிய சேவைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் புதிய உத்தியோகத்தர்களுக்காக சேவை ஆரம்பப் பயிற்சிநெறிகளை நடாத்துதல் (கட்டணம் அறவிடப்படாத பயிற்சிநெறிகள்)
    i. இலங்கை நிருவாக சேவை (இ.நி.சேவ)
    ii. இலங்கை கணக்காளர் சேவை (இ.க.சே)
    iii. இலங்கை திட்டமிடல் சேவை (இ.தி.சே)
    iv. இலங்கை விஞ்ஞான சேவை (இ.வி.சே)
    v. இலங்கை கட்டடக் கலைஞர் சேவை (இ.க.க.சே)
    vi. இலங்கை பொறியியல் சேவை (இ.பொ.சே)
    vii. இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை (இ.த.தொ.தொ.சே)
2. வகுப்பு ஐ மற்றும் ஐஐஐ மட்டங்களிலுள்ள மட்டங்களிலுள்ள நாடளாவிய சேவைகளின் உத்தியோகத்தர்களுக்கு கட்டாயமான திறன் விருத்தி நிகழ்ச்சிகள் (கட்டணம் அறவிடப்படாத நிகழ்ச்சிகள்)
3. டிப்ளோ பாடநெறிகள் (கட்டணம் அறவிடப்படுபவை)
4. குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சிகள் (கட்டணம் அறவிடப்படாத நிகழ்ச்சிகள்)
5. தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் - அரச துறை நிறுவனங்களினதும் அரச துறைத் தொழில்முயற்சிகளினதும் வேண்டுகோளின் பேரில் நடாத்தப்படுபவை (கட்டணம் அறவிடப்படும் பாடநெறிகள்)
6. முகாமைத்துவ ஆலோசைகள் (கட்டணம் அறவிடப்படும்)
7. கருத்தரங்குகள் (கட்டணம் அறவிடப்படும் மற்றும் கட்டணம் அறவிடப்பாத நிகழ்ச்சிகள்)

மீளாய்வாண்டில் பின்வரும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

6.1 சேவை ஆரம்பப் பயிற்சிப் பாடநெறிகள்

மேற்படி உரி சேவைகளின் முன்னோடிகளாச் செயற்படுவதற்காக தேவையான விரிவான வீச்சைக் கொண்ட விடயங்கள் மற்றும் ஏனைய தேவையான அறிவு, தேர்ச்சிகள் மற்றும் மனப்பாங்குகளை வழங்கும் நோக்கில் நாடளாவிய சேவைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் புதிய உத்தியோகத்தர்களுக்காக சேவை ஆரம்பப் பயிற்கள் நடாத்தப்படுகின்றன. பிரதான விடயப் பொறுப்புக்கள் தொடர்பான மொடியூல்களைத் தவிர கொதலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழத்தின் பங்கேற்புடன் வெளிவாரியான பயிற்சியாக தனிநபர்களின் ஆளுமை விருத்திக்காக விசேட நிகழ்ச்சிகள் உள்ளடக்கப்படுகின்றன. மேலும், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் மொழி நிலையத்தினால் மேற்குறித்த சேவை ஆரம்பப் பயிற்சிகளில் ஆங்கில மொழிப் பயிற்சியும் நடாத்தப்பட்டது. சில நிகழ்ச்சிகள் பிரிட்டிஷ் கவுன்சிலின் உதவியுடன் நடாத்தப்பட்டன.

மீளாய்வாண்டில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் நாடளாவிய சேவைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 310 உத்தியோகத்தர்களுக்கான 3 சேவை ஆரம்பப் பாடநெறிகளை நடாத்தியதுடன் அப்பயிற்சிநெறிகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

தொடர் இலக்கம்	நாடளாவிய சேவை	பங்குபற்றியோர் எண்ணிக்கை	முன்னேற்றம்
01	இலங்கை விஞ்ஞான சேவை (முதலாம் தொகுதி)	28	பூர்த்தி செய்யப்பட்டது
02	இலங்கை விஞ்ஞான சேவை (இரண்டாம் தொகுதி)	22	நடைபெற்று வருகின்றது
03	இலங்கை மொழிபெயர்ப்பாளர் சேவை	51	பூர்த்தி செய்யப்பட்டது
04	இலங்கை பொறியியலாளர் மற்றும் கட்டடக் கலைஞர் சேவை	209	நடைபெற்று வருகின்றது
	மொத்தம்	**310**	

6.2 நாடளாவிய சேவைகளுக்கான கட்டாய கற்கைகள் மற்றும் அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சிகள்

நாடளாவிய சேவைகளின் உத்தியோகத்தர்களின் தொழில்சார் அபிவிருத்திக்குத் தேவையான அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குகள் என்பவற்றைத் தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்தலும் அதேபோன்று அவற்றின் மூலம் போஷிப்பதும் தனது முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் அடையாளம் கண்டுள்ளது.

நாடளாவிய சேவைகளின் சேவைப் பிரமாணக் குறிப்புக்களின் அடிப்படையில் குறித்த சேவைகளின் ஒவ்வொரு உத்தியோகத்தரும் சேவை ஆரம்பப் பயிற்சி நெறியையும் திறன் விருத்தி நிகழ்ச்சிகளையும் உரிய முறையில் பூர்த்தி செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்துப்பட்டுள்ளது.

அதனால் இந்த உத்தியோகத்தர்கள் மத்தியில் தொடர்ச்சியான கற்றல் கலாசாரமொன்றை உருவாக்குவதற்காகவும் வினைத்திறன்மிக்கதும் பயனுறுதிவாய்ந்ததுமான சேவையினை உறுதிப்படுத்துவதும் முக்கியமான தேவைப்பாடாக உள்ளது. அதனடிப்படையில், நாடளாவிய சேவைகளின் உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் இந்த நிகழ்ச்சிகள் பின்வரும் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

- காலத்துக் காலம் தேவைப்படுவதும் குறிப்பாக அடையாளம் காணப்பட்டுள்ள நடத்தை மற்றும் தொழில்நுட்பங்களை வழங்குதல்.
- துரிதமாக மாற்றமடையும் சூழலொன்றில் அதிகரித்து வரும் சவால்களுக்கு ஏற்பச் செயற்படுவதற்குத் தேவையான அறிவு மற்றும் திறன்களைத் தொடர்ச்சியாக இற்றைப்படுத்துதல்.

அதனடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால், இலங்கை நிருவாகச் சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை திட்டமிடல் சேவை ஆகிய சேவைகளைச் சேர்ந்த 925 உத்தியோகத்தர்களுக்கும் நடுத்தர தொழில்சார் திறன் விருத்தி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன் அது தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

சேவை	தொகுதிகளின் எண்ணிக்கை	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை	முன்னேற்றம்
இலங்கை நிருவாக சேவை (தரம் I)	6	179	பூர்த்தி செய்யப்பட்டது
இலங்கை நிருவாக சேவை (தரம் I)	8	292	5 தொகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டன
இலங்கை கணக்காளர் சேவை (தரம் I)	5	120	7 தொகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டன
இலங்கை கணக்காளர் சேவை (தரம் III)	6	233	நடைபெற்று வருகின்றது
இலங்கை திட்டமிடல் சேவை (தரம் I)	4	140	பூர்த்தி செய்யப்பட்டது
மொத்தம்	29	964	

தரம் ஐ உத்தியோகத்தர்களுக்கான திறன் விருத்தி நிகழ்ச்சிகளில் வெளிநாட்டு அனுபவங்களைப் பெறுவதற்காக சுற்றுலாவொன்றும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியின் குறிக்கோள் கற்றல் செயற்பாடுகளின் போது நடைமுறைக் கற்றலையும் அனுபவத்தையும் பெறுவதற்காக

பங்குபற்றுநர்களுக்கு வெளிநாட்டு அனுபவங்களை வழங்குதல். பயிற்சிப் பாடத்திட்டம் மற்றும் நடைமுறை, பிரதானமாக அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் சர்வதேச ரீதியான மிகச் சிறந்த நடைமுறைகளைக் கற்றல் இலக்குகளாகக் கொண்டு இலக்காகக் கொள்ளப்பட்ட குழுக்களுக்கு வலுவூட்டுவதற்கான அடிப்படையாகக் காணப்பட்டது.

அதனடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தில் தங்களது தொழில்சார் திறன் விருத்தி நிகழ்ச்சியைப் பூர்த்தி செய்திருநத இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் 136 உத்தியோகத்தர்களும் இலங்கை திட்டமிடல் சேவையின் 29 உத்தியோகத்தர்களும் மலேசியாவில் வெளிநாட்டு அனுபவத்தைப் பெறுவதற்காக சுற்றுலா அனுப்பப்பட்டதுடன் இலங்கை கணக்காளர் சேவையின் 35 பேரும் இந்தியாவில் வெளிநாட்டு அனுபவத்தைப் பெறுவதற்காக சுற்றுலா அனுப்பப்பட்டனர்.

6.3 டிப்ளோமா நிகழ்ச்சிகள்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம், அரச துறை பெறுகை மற்றும் ஒப்பந்த நிருவாகம் (னுஜீஊயு) (ர்னுஜீஊயு), தகவல் தொழில்நுட்பம் (னுஜவு),அலுவலக முகாமை (னுழுஆ), .களஞ்சிய முகாமை (னுளுஆ), மற்றும் வாண்மைத்தொழில் புரிவோருக்கான ஆங்கிலம் ஆகிய டிப்ளோமா பாடநெறிகளை நடாத்துகின்றது. இந்த நிகழ்ச்சிகள் மிகவும் பிரபல்யமானவையாக உள்ளதுடன் அரச துறையின் செயலாற்றுகை வளர்ச்சிக்காக அதன் மூலம் மிகவும் பெறுதியான பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

அதனடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் பின்வரும் டிப்ளோமா நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

தொடர் இலக்கம்	நிகழ்ச்சியின் பெயர்	நிகழ்ச்சியின் காலப் பகுதி (நாட்கள்)	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை
01	தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா	6 மாதங்கள்	1	20
02	அலுவலக முகாமை தொடர்பான டிப்ளோமா	வருடம் 1	1	30
03	அரச துறையின் பெறுகை மற்றும் ஒப்பந்த நிருவாக டிப்ளோமா	வருடம் 1	2	97
04	அரச துறையின் பெறுகை மற்றும் ஒப்பந்த நிருவாக உயர் தேசிய டிப்ளோமா	14 மாதங்கள்	4	164
05	கையிருப்புக் கட்டுப்பாடு தொடர்பான டிப்ளோமா	வருடம் 1	1	36
	மொத்தம்		9	347

2018 ஆம் ஆண்டில் அரச துறையின் பெறுகை மற்றும் ஒப்பந்த நிருவாக டிப்ளோமா மற்றும் அலுவலக முகாமை தொடர்பான டிப்ளோமா என்பவற்றைப் கற்ற முறையே 28 மற்றும் 23 உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு அனுபவத்தைப் பெறுவதற்ககாக இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டனர்.

6.4 குறுகிய கால கற்கைகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள்

மீளாய்வுக் காலப் பகுதியினுள் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் பின்வமாறு 17 குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன் அவற்றில் மொத்தமாக 351 உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

தொடர் இலக்கம்	நிகழ்ச்சியின் பெயர்	நிகழ்ச்சியின் காலப் பகுதி (நாட்கள்)	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை
01	மனித வள முகாமை	2	2	33
02	உற்பத்தித்திறன் மற்றும் ஐந்து எஸ் கோட்பாடு தொடர்பான செயலமர்வு	1	1	15
03	அரச பெறுகை நடைமுறைகளின் சுருக்கம்	3	1	26
04	கூறுவிலை மதிப்பீடு பற்றிய நிகழ்ச்சி	3	1	27
05	செயற்திட்டப் பிரேரணைகள் தயாரித்தல் பற்றிய நிகழ்ச்சி	5	2	43
06	உயர் எக்செல் நிகழ்ச்சி பயிற்சி	3	2	51
07	எம்.எஸ்.எக்செல் மூலம் தரத் தள முகாமை	3	3	46
08	கொள்கைப் பத்திரங்கள் எழுதுதல் தொடர்பான செயலமர்வு	4	1	16
09	அரச துறை ஒழுக்காற்று நடைமுறை	5	1	29
10	பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு	5	1	26
11	அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்/ பத்திரங்கள் தயாரித்தல் தொடர்பான செயலமர்வு	3	1	15
12	தீர்மானம் எடுப்பவர்களுக்கான மென் திறன்கள் செயலமர்வு	3	1	24
	மொத்தம்		**17**	**351**

6.5 தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள்

இந்த நிகழ்ச்சிகள் வாடிக்கையாளர் நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப் பெறும் கோரிக்கைகளுக்குப் பொருத்தமான முறையில் திட்டமிடப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் 43 நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளதுடன் அரச துறை நிறுவனங்களின் கோரிக்கைகளின் பேரில் 1281 உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்துள்ளது. அதற்காக 2018 ஆம் ஆண்டில் பின்வரும் தனிப்பயனாக்கப்பட்ட நிகழ்ச்சிகளை நடாத்தியது.

தொடர் இலக்கம்	வாடிக்கையாளர் நிறுவனம்	தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் துறை	பங்குபற்றியோர் எண்ணிக்கை
1	இலங்கை மின்சார சபை	அலுவலக முகாமை மற்றும் கோவைப்படுத்தல தொகுதிகள் பற்றிய தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	36
2	தேசிய போக்குவரத்து ஆணைக்குழு	முகாமையாளர்களுக்கான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	36
3	அனர்த்த முகாமைத்துவ அமைச்சு	அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி தொகுதி I	30
4	தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைச் சபை	சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்ச	18
5	கணக்காய்வாளர் அதிபதி அலுவலகம்	பேச்சுவார்த்தை திறன்கள் பற்றிய தனிப்பயனாக்கப்பட்ட நிகழ்ச்சி	40

6	இலங்கை மகாவலி அதிகாரசபை	ஒழுக்காற்று நடைமுறை தொடர்பான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	25
7	விசேட அதிரடிப் படைப் பயிற்சிப் பாடசாலை - இலங்கை பொலிஸ்	நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	30
8	அனர்த்த முகாமைத்துவ அமைச்சு	அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி தொகுதி II	30
9	ரிகேலியா டோஸ்ட் மாஸ்டர்ஸ்	பேச்சாற்றல் அனுமதிப்பத்திரம் பெற்ற தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் துறை	25
10	விசேட அதிரடிப் படைப் பயிற்சிப் பாடசாலை - இலங்கை பொலிஸ்	நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	30
11	தேசிய பொலிஸ் ஆணைக்குழு	பொலிஸ் அத்தியட்சகர்களுக்கான ஒழுக்காற்று நடைமுறை தொடர்பான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி தொகுதி I	36
12	பொலிஸ் தலைமையகம்	நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	20
13	தேசிய பொலிஸ் ஆணைக்குழு	பொலிஸ் அத்தியட்சகர்களுக்கான ஒழுக்காற்று நடைமுறை தொடர்பான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி தொகுதி II	36
14	தேசிய பொலிஸ் ஆணைக்குழு	பொலிஸ் அத்தியட்சகர்களுக்கான ஒழுக்காற்று நடைமுறை தொடர்பான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி தொகுதி III	36
15	ஆதர் சீ கிளார்க் நவீன தொழில்நுட்ப நிலையம்	அலுவலக முறைமைகள் மற்றும் கணக்கக்கீட்டு முறைமைகள் தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	15
16	இலங்கை பொலிஸ் மறுசீரமைப்பு	பிரதிப் பொலிஸ் மாஅதிபர்கள் மற்றும் சிரே்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர்களுக்கான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	80
17	இலங்கை மகாவலி அதிகாரசபை	ஒழுக்காற்று நடைமுறை தொடர்பான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	24
18	ரிகேலியா டோஸ்ட் மாஸ்டர்ஸ்	நாடளாவிய சேவைகளின் வகுப்பு I உத்தியோகத்தர்களுக்கான பேச்சுத் திறன் தொடர்பான டோஸ்ட் மாஸ்டர் தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி - தொகுதி I	20
19	ரிகேலியா டோஸ்ட் மாஸ்டர்ஸ்	நாடளாவிய சேவைகளின் வகுப்பு I உத்தியோகத்தர்களுக்கான பேச்சுத் திறன் தொடர்பான டோஸ்ட் மாஸ்டர் தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி - தொகுதி II	22
20	தேசிய பொலிஸ் ஆணைக்குழு	பொலிஸ் அத்தியட்சகர்களுக்கான ஒழுக்காற்று நடைமுறை தொடர்பான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி தொகுதி 1V	35
21	தேசிய பொலிஸ் ஆணைக்குழு	பொலிஸ் அத்தியட்சகர்களுக்கான ஒழுக்காற்று நடைமுறை தொடர்பான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி தொகுதி V	36
22	தேசிய பொலிஸ் ஆணைக்குழு	பொலிஸ் அத்தியட்சகர்களுக்கான ஒழுக்காற்று நடைமுறை தொடர்பான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி தொகுதி VI	36
23	ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	இணைப்புத்திறன் தொடர்பான தனிப்பயனாக்கப்பட்ட இணையவழி மொடியூல் பயிற்சி நிகழ்ச்சி	30
24	சுகாதார மேம்பாட்டுப் பணியகம் (சுகாதார போ'ாக்கு மற்றும் உள்நாட்டு வைத்திய அமைச்சு)	பயிற்றுவிப்பாளர்களுக்குப் பயிற்சியளித்தல் தனிப்பயனாக்கப்பட்ட நிகழ்ச்சி	30

25	தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சு	அரச துறையின் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய பிரச்சினைள் தொடர்பான பிரயோக ஓய்வு ஒன்றை நடாத்துதல்	39
26	நிலைபேறான அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சு	அபிவிருத்தியடைந்து வரும் சிறிய தீவு அரசுகளின் பிரதிநிதிகள் குழுவொன்றுக்கான வசதி ஏற்பாட்டாளர்	45
27	இலங்கை கடற்படை தலைமையகம்	உப லெப்டினட்களுக்கான (லொஜிஸ்டிக்) அரச நிதி மற்றும் அரச பெறுகை முகாமை மொடியூல்	25
28	தேசிய பொலிஸ் ஆணைக்குழு	பொலிஸ் அத்தியட்சகர்களுக்கான ஒழுக்காற்று நடைமுறை தொடர்பான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி தொகுதி VII	34
29	தேசிய பொலிஸ் ஆணைக்குழு	பொலிஸ் அத்தியட்சகர்களுக்கான ஒழுக்காற்று நடைமுறை தொடர்பான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி தொகுதி VIII	35
30	தொகைமதிப்பு, புள்ளவிபரவியல் திணைக்களம்	சிரேஷ்ட மற்றும் நடுத்தர மட்டத்திலான முகாமையாளர்களுக்கான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	14
31	இலங்கை புலமைச் சொத்துக்கள் நிறுவனம்	தனிப்பயனாக்கப்பட்ட சேவை ஆரம்பப் பயிற்சிப் நிகழ்ச்சி	20
32	ஜய்கா /போவர்ட் செயற்திட்டம்	பயிற்றுவிப்பாளர்களுக்குப் பயிற்சியளித்தல் தனிப்பயனாக்கப்பட்ட நிகழ்ச்சி. தொகுதி - I	23
33	ஜய்கா /போவர்ட் செயற்திட்டம்	பயிற்றுவிப்பாளர்களுக்குப் பயிற்சியளித்தல் தனிப்பயனாக்கப்பட்ட நிகழ்ச்சி. தொகுதி - II	13
34	ரிகேலியா டோஸ்ட் மாஸ்டர்ஸ்	விசேட சேவைகளின் உத்தியோகத்தர்களுக்கான பேச்சுத் திறன் தொடர்பான டோஸ்ட் மாஸ்டர் தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி - தொகுதி I	25
35	பொது நிருவாக, முகாமைத்துவ, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு	இலங்கை விஞ்ஞான சேவை உத்தியோகத்தர்களுக்கான பேச்சுத் திறன் தொடர்பான டோஸ்ட் மாஸ்டர் தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி - தொகுதி I	20
36	பொது நிருவாக, முகாமைத்துவ, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு	இலங்கை விஞ்ஞான சேவை உத்தியோகத்தர்களுக்கான பேச்சுத் திறன் தொடர்பான டோஸ்ட் மாஸ்டர் தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி - தொகுதி II	20
37	பொது நிருவாக, முகாமைத்துவ, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு	ஆரம்ப புலன் விசாரணை தொடர்பான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	28
38	சுகாதார மேம்பாட்டுப் பணியகம் (சுகாதார போ'ாக்கு மற்றும் உள்நாட்டு வைத்திய அமைச்சு)	பயிற்றுவிப்பாளர்களுக்குப் பயிற்சியளித்தல் தனிப்பயனாக்கப்பட்ட நிகழ்ச்சி	24
39	தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்	ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட புதிய உத்தியோகத்தர்களுக்கான திறன் விருத்தி தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்	40
40	விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் மேல் மாகாணம்	மென் திறன்கள் தொடர்பான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	30
41	விளையாட்டுத் துறை அபிவிருத்தி திணைக்களம்	பெறுகை நடைமுறைகள் தொடர்பான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	40
42	தொகைமதிப்பு, புள்ளவிபரவியல் திணைக்களம்	ஒருங்கிணைந்த திட்டம் தயாரித்தல் தொடர்பான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	25
43	கடற் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை	முமைத்துவ மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி	25
மொத்தம்			**1281**

6.6 முகாமைத்துவ ஆலோசனைகள்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் கல்வி மற்றும் அபிவிருத்திப் பிரிவு அரச துறை நிறுவனங்களுக்கு முகாமைத்துவ ஆலோசனைச் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது. பொதுவாக இந்த ஆலோசனைச் சேவைகளில் பதவியணி எண்ணிக்கை மீளாய்வு, நடைமுறைகள், பணி அளவு மதிப்பீடு, கைநூல்கள் மற்றும் வழிகாட்டில்கள் தயாரித்தல், ஒருங்கிணைந்த திட்டம் தயாரித்தல், மனித வளத் திட்டம் தயாரித்தல், மனித வளத் திட்டங்கள் தயாரித்தல், செயலாற்றுகை உபாயமுறைத் திட்டங்களை விருத்தி செய்தல் என்பன உள்ளடங்கும். இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் 2018 ஆம் ஆண்டில் பின்வரும் நிறுவனங்களுக்கு நிறுவன அபிவிருத்திச் சேவைகள் வழங்கப்பட்டன.

- இலங்கை நிலைபேறான எரிசக்தி அதிகாரசபையின் நிருவாகக் கட்டமைப்பு தொடர்பான ஆய்வு
- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணி அளவு மதிப்பீடு
- இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் செயலாற்றுகை அபிவிருத்தி உபாய முறைத் திட்டத்தைத் தயாரித்தல்

6.7 வெளிநாட்டுப் பயிற்சி நிறுவனங்ளில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான ஒருங்கிணைப்பு வெளிநாட்டு தனிப்பயனாக்கப்பட்ட நிகழ்ச்சிகள்

2018 ஆம் ஆண்டில் அரசின் கணக்குகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு தொடர்பில் இந்திய அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில் 32 உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டன.

6.8 பகிரங்க கருத்தரங்குகள்

2018 ஆம் ஆண்டில் அரச உத்தியோகத்தர்களின் அறிவைக் கட்டியெழுப்பும் நோக்கில் சமகால கருப்பொருள்கள் தொடர்பில் பின்வரும் விசேட கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

- நிலைபேறான பெறுகை மற்றும் ஆசிய நாடுகளில் நிலையபெறான பெறுகை வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது எதிர்நோக்கப்படும் சவால்கள் சவால்கள் தொடர்பான கருத்தரங்கு
- அரச துறையின் சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான அரச பெறுகைச் செயன்முறை பற்றிய பயிற்சி நிகழ்ச்சி

மேற்படி பிரதான செயற்பாடுகளுக்கு மேலதிகமாக கல்வி மற்றும் அபிவிருத்தித் துறையினால் 2018 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

6.9 ஏனைய முன்னெடுப்புக்கள்

- **நடமாடும் பயிற்சி நிகழ்ச்சிகள்**

  2017- 2021 காலப் பகுதிக்கான உபாயமுறைத் திட்டத்தின் ஒரு செயற்பாடாக 2018 ஆம் ஆண்டில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் கல்வி மற்றும் அபிவிருத்திக்கான நடமாடும் சேவை ஆரம்பிக்கப்பட்டது. அதற்கிணங்க, நிறுவனம் உரிய நிறுவனங்களின் கோரிக்கையின் பேரில் மாகாண சபைகள் மற்றும் மாவட்டங்களுக்காக தனது கல்விசார் ஊழியர் குழாத்திலுள்ள நிபுணர்களின் சேவைகளை வழங்குவதுடன் ஏனைய தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குகின்றது. அந்த வகையில் 2018 ஆம் ஆண்டில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் ஊவா மாகாணத்தில் மொனராகலை, சப்ரகமுவை

மாகாணத்தில் இரத்தினபுரி, வடமேல் மாகாணத்தில் புத்தளம், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் 4 நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டன.

தொடர் இலக்கம்	நிகழ்ச்சியின் பெயர்	பயிற்சி நிலையம்	நாட்களின் எண்ணிக்கை	பங்குபற்றியோர் எண்ணிக்கை
1	நேர முகாமை மற்றும் பெறுகைச் செயலொழுங்கு	மொனராகலை மாவட்ட செயலகம்	1	100
2	இ-அரசாங்க மற்றும் தகவல் பாதுகாப்பு பற்றிய நடமாடும் பயிற்சி நிகழ்ச்சி	மட்டக்களப்பு மாவட்ட செயலகம்	2	135
3	கூறுவிலை மதிப்பீடு	புத்தளம் மாவட்ட செயலகம்	2	60
4	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளும் செயற்பாட்டுத் திட்டமும்	சபரகமுவை மாகாண சபை	1	36
5	ஆய்வு முறைகள்	சிறுவர் செயலகம்	1	65

- **நாடளாவிய சேவைகளின் விசேட தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான திசைப்படுத்தல் நிகழ்ச்சி**

சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய முகவர் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் சிரேட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் 2018 ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 1 ஆந் திகதி ஆகிய இரண்டு தினங்களில் முதலாம் குழுவுக்கும் 2018 செப்டம்பர் 14, 15 ஆம் திகதிகளில் 2 ஆம் குழுவுக்கும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் புதிய கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது.

இந்த உத்தியோகத்தர்கள் மேல், வடமேல், மத்திய, ஊவா, தென், சபரகமுவை ஆகிய ஆறு மாகாண சபைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்தனர்.

இலங்கையில் மோதல்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் முன்னிலை உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான செயற்திட்டத்தின் (குழுசுறுயுசுனு செயற்திட்டம்) கீழ் தயாரிக்கப்பட்ட விரிவான பயிற்சி மொடியூலைப் பயன்படுத்தி முன்னிலை உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான பத்து நாள் நிகழ்ச்சியை நடாத்துவதற்கான வசதி ஏற்பாட்டாளராக.். பயிற்றுவிப்பாளர்களாகச் செயற்படுவதற்காக இரண்டு குழுக்களிலும் 48 சிரேட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

குழுசுறுயுசுனு செயற்திட்டம் வடக்கு, கிழக்கு, வட மத்திய மாகாணங்களில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது.





05. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட நிறைவேற்றுநர் அபிவிருத்திச் செயலமர்வு: “வளம் நிறைந்த இலங்கை” அரச துறை முதன்மையாளர்களின் வகிபாகம்”

”வளம் நிறைந்த இலங்கை - அரச துறை முதன்மையாளர்களின் வகிபாகம்” என்ற தொனிப்பொருளின் கீழ் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் இலங்கை நிருவாக சேவையின் 1 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட நான்கு நாள் நிறைவேற்று அபிவிருத்திச் செயலமர்வு இரண்டாம் முறையாகவும் 2018 ஜூலை 3 ஆந் திகதி முதல் 6 ஆந் திகதி வரையும் நடாத்தப்பட்டது. இலங்கையின் அபிவிருத்திக்கு இறுதியில் உதவயாக அமையும் உபாயமுறை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட சிந்தனையை விரிவுபடுத்துவதற்கான அறிவைப் பெறுவதன் மூலம் தேவையான தேர்ச்சிகளை உத்தியோகத்தர்கள் தங்களுக்குள் வளர்த்துக் கொள்வது இந்தச் செயலமர்வின் இலக்காக இருந்தது. இச்செயலமர்வில் கீர்த்தி அரசாங்க உத்தியோகத்தர்களும், அமைச்சுக்களின் சிரேட்ட ஆலோசகர்களும் கல்வியியலாளர்களும் வளவாளர்களாகவும் சபை அங்கத்தவர்களாகவும் பங்கேற்றனர்.

USAID இன் நிதியுதவியைப் பெறும் சனநாயக ஆட்சி மற்றும் பொறுப்புக்கூறலை பலப்படுத்தும் செயற்திட்டத்தின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்ட இச்செயலமர்வு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி வசந்தா பெரேரா அவர்களின் தலைமையில் பாணந்துறை துநை துநய டீநயஉா டில துநவறபை ஹோட்டலில் நடாத்தப்பட்டது.



- இரண்டாவது நிறைவேற்று உத்தியோகத்தர் அபிவிருத்திச் செயலமர்வு: "வளம் நிறைந்த இலங்கை" அரச துறை முதன்மையாளர்களின் வகிபாகம்"

"வளம் நிறைந்த இலங்கை - அரச துறை முதன்மையாளர்களின் வகிபாகம்" என்ற தொனிப்பொருளின் கீழ் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் இலங்கை நிருவாக சேவையின் 1 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட நான்கு நாள் நிறைவேற்று அபிவிருத்திச் செயலமர்வு இரண்டாம் முறையாகவும் 2018 ஆகஸ்ட் 14 ஆந் திகதி முதல் 17 ஆந் திகதி வரையும் நடாத்தப்பட்டது. இலங்கையின் அபிவிருத்திக்கு இறுதியில் உதவயாக அமையும் உபாயமுறை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட சிந்தனையை விரிவுபடுத்துவதற்கான அறிவைப் பெறுவதன் மூலம் தேவையான தேர்ச்சிகளை உத்தியோகத்தர்கள் தங்களுக்குள் வளர்த்துக் கொள்வது இந்தச் செயலமர்வின் இலக்காக இருந்தது. கீர்த்திமிக்க அரசாங்க உத்தியோகத்தர்களும், கல்வியியலாளர்களும் வளவாளர்களாகவும் சபை அங்கத்தவர்களாகவும் இச்செயலமர்வில் பங்கேற்றனர். ருளுயுஜனு இன் நிதியுதவியைப் பெறும் சனநாயக ஆட்சி மற்றும் பொறுப்புக்கூறலை பலப்படுத்தும் செயற்திட்டத்தின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்ட இச்செயலமர்வு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி வசந்தா பெரேரா அவர்களின் தலைமையில் வைக்காலை ஊடரடி ர்ழவநட னுழடிாலை ஹோட்டலில் நடாத்தப்பட்டது. ஹோட்டலில் நடாத்தப்பட்டது.





06. பொலிஸ் மறுசீரமைப்பு தொடர்பான அறிவூட்டல் கருத்தரங்கு



இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் பொது நிருவாக, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் ஒத்துழைப்புடன் பொலிஸ் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் சிரே்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர்களுக்கும் பிரதிப் பொலிஸ் மாஅதிபர்களுக்கும் அறிவூட்டும் கருத்தரங்கை 2018 மே மாதரம் 11 ஆம் திகதி சிறப்பாக நடாத்தியது.

பொது நிருவாக மற்றும் சட்டம், ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார அவர்களினதும் அமைச்சின் செயலாளர் பத்மசிரி ஜயமான்ன அவர்களினதும் பொலிஸ் மாதஅதிபரினதும் தலைமையில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கில் பங்கேற்றவர்களை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் உத்தியோகபூர்வமாக வரவேற்றதுடன் பொலிஸ் மறுசீரமைப்புக்கள் தொடர்பான உத்தேச செயற்பாட்டுத் திட்டம் இந்த அமர்வில் ஆழமாகக் கலந்துரையாடப்பட்டது. மறுசீரமைப்பு வழிகாட்டல் குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் அமைச்சினதும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் சிரே்ட உத்தியோகத்தர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

07. இந்திய அரசின் சிவில் ஊழியர்களுக்கான நிதி முகாமை மற்றும் கணக்காய்வு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி (NIFM)

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் இந்திய அரசின் உள்ளகக் கணக்காய்வாளர்களுக்கான நிதி முகாமை மற்றும் கணக்காய்வு முன்னெடுப்புக்கள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சியொன்று 2018 மே 13 முதல் 19 வரை சிறப்பாக நடாத்தப்பட்டது. பல்வேறு அமைச்சுக்களையும் திணைக்களங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் முப்பது பேர் இதில் பங்கேற்றதுடன் உள்ளகக் கணக்காய்வு மற்றும் அரச நிதி முகாமை தொடர்பில் இலங்கையிலும் இந்தியாவிலும் பயன்படுத்தப்படும் முறைகளையும் இரு நாடுகளினதும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளுதல் இந்த நிகழ்ச்சியின் பிரதான குறிக்கோளாக இருந்தது.



08. நாடளாவிய சேவைகளின் வகுப் ஐ உத்தியோகத்தர்களுக்கான வுழயளவஅயளவநசள ஐவெநசயெவழையெட ஊடாக பேச்சுக் கலைப் பயிற்சி

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் வுழயளவஅயளவநசள ஐவெநசயெவழையெட உடன் இணைந்து சிரே்ட அரச உத்தியோகத்தர்களுக்காகப் பல சுற்று பேச்சுக் கலைப் பயிற்சி நிகழ்ச்சிகள் சிறப்பாக நடாத்தப்பட்டன. அந்த நிகழ்ச்சியைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



09. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பசுமை வாரம்

அரசின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன்மிக்க வலையமைப்புச் செயற்திட்டதிற்கு வசதி ஏற்பாடுகளைச் செய்யும் நோக்கில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் தனது பசுமை முன்னெடுப்புக்களை ஊக்குவிப்பதற்காக 2018 மார்ச் 26 முதல் 29 ஆந் திகதி வரை பசுமை வாரமொன்றை பிரகடனம் செய்தது. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பசுமை வாரத்தின் அங்குரார்ப்பண வைபவம், பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிரி, மின்சக்தி, எரிசக்தி அமைச்சின் செயலாளர் பி.எம்.எஸ். பட்டகொடை அதிமேதகு ஜேர்மனியத் தூதுவர் துழாஎ சுழானந ஆகியோரும் அரச மற்றும் தனியார் துறைகளின் பிரதிநிதிகள் பலரதும் பங்கேற்புடன் நடாத்தப்பட்டது





10. கடலை தானசாலை

வெசாக் கொண்டாட்டத்துடன் இணைந்த வகையில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக வளாகம் பௌத்த கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு வெசாக் கூடுகள் ஒளியூட்டப்பட்டன. அது தவிர 2018 மே 30 ஆம் திகதி பின்னேரம் பௌத்தாலோக மாவத்தையில் டொரிங்டன் வெசாக் கூடுகளைப் பார்ப்பதற்கு வருகை தந்த பக்தர்களுக்காக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் நலன்புரிச் சங்க அங்கத்தவர்களால் கடலை தானசாலையொன்று நடாத்தப்பட்டது.





11. அரச முகாமைத்துவ முதுகலைமானிப் பாடநெறியின் 2017 - 2019 குழுவின் அங்குரார்ப்பண நிகழ்ச்சி

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பட்டப் பின் கற்கைப் பாடசாலையினால் அதன் அரச முகாமைத்துவ முதுகலைமானிப் பாடநெறியின் 2017- 2019 குழுவுக்கு 89 விண்ணப்பதாரர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அங்குரார்ப்பண நிகழ்ச்சி 2018 பெப்ரவரி மாதத்தில் நடாத்தப்பட்டதுடன் பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் கௌரவ மத்தும பண்டார அவர்களின் இதில் பிரதம அதிதியாகப் பங்கேற்றார்.









12. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பகிரங்க சொற்பொழிவுத் தொடர்

இலங்கையின் அரச மற்றும் தனியார் துறைகளிலுள்ள நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்களின் முகாமைத்துவத் திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பட்டப் பின் கற்கைகள் பாடசாலையினால் விரிவுரைத் தொடரொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன் 2018 ஆம் ஆண்டுக்கான நான்காது விரிவுரை "உயிரோட்டமான ஏற்பாடு: சிறந்த பெறுபேறுகளை அடைவதற்காக ஏற்பாடுகளை மாற்றியமைத்தல்" என்ற தலைப்பின் கீழ் 2018 ஜூன் 25 ஆந் திகதி அந்த நிறுவனத்தின் சன்வதனீ மண்டபத்தில் நடாத்தப்பட்டது. அந்த விரிவுரை பீஜிங் வெளிநாட்டுக் கற்கைகள் பல்கலைக்கழகத்தின் உப தலைவர் பேராசிரியர் புரழாரய லுயகெ அவர்களால் நடாத்தப்பட்டது. அதில் பங்கேற்ற இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் கல்விசார் ஊழியர்களும் சிரேட்ட அர உத்தியோகத்தர்களும் இந்த விரிவுரையில் நடைபெற்ற கலந்துரையாடலின் மூலம் பயனடைந்தனர்.





13. **இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் டிஜிட்டல் எகடமிக்கான முதலாம் படிமுறையாக தகவல்களை அறிவதற்கான உரிமை தொடர்பான இணையவழிச் சான்றிதழ் பாடநெறி இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டது..**



இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகத்தின் இறுதி உத்தியோகபூர்வ வைபவமாக அதன் மென் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இந்தப் பணிக்காக அவர் ஆற்றிய முன் னோடிப் பணிக்காக அவரை கௌரவிக்கும் வாய்ப்பு எமக்கு கிடைத்தது.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்

நிதி நிலை அறிக்கை

2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியிலிருந்து

	குறிப்பு	2018	2017
		ரூபா.சதம்	ரூபா. சதம்
சொத்துக்கள்			
நடப்புச் சொத்துக்கள்	03		
வங்கி நிலுவை		72,042,623,13	4,051,951.91
வைப்பிலிடப்படாத பற்றுச்சீட்டுக்கள்		525,555.04	120,376.50
3மாத வைப்புக்கள்	04	290,170,307.53	268,046,188.01
கிடைக்கப் பெற வேண்டியவை	05	29,937,094.12	36,800,695.54
கையிருப்புக்கள்	06	4,518,286.49	3,097,579.47
முற் கட்டணங்கள்	07	3,429,902.43	4,931,816.97
முற்பணங்கள்	08	1,940,973.56	5,715,120.34
ஊழியர் கடன்கள்	09	15,432,939.82	15,036,793.34
		417,997,682.12	***337,800,522.08***
நடப்பற்ற சொத்துக்கள்			
சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்	10	26,777,965.38	412,427,321.74
பணிக்கொடை நிதிய முதலீடு	11	34,776,276.63	31,591,567.42
வைப்புக் கணக்கு	12	1,299,500.00	1,299,500.00
		62,853,742.01	445,318,389.16
மொத்த சொத்துக்கள்		480,851,424.13	783,118,911.24
பொறுப்புக்கள்			
நடப்புப் பொறுப்புக்கள்			
செலுத்தப்பட வேண்டிய வைப்பு	13	50,845,178.00	23,151,896.28
முற்பண பற்றுச்சீட்டுக்கள்	14	93,686,228.51	79,421,201.83
திரட்டப்பட்ட செலவுகள்	15	25,431,601.95	19,985,653.00
நிச்சயமற்ற பெறத்தக்கவைகளுக்கான ஏற்பாடுகள்		3,669,302.08	3,221,450.00
		173,632,310.54	125,780,201.11
நடப்பற்ற பொறுப்புக்கள்			
வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையம்	16	23,170,823.72	24,825,882.55

பணிக்கொடைக்கான ஏற்பாடு	17	29,614,322.20	28,994,006.20
		52,785,145.92	53,819,888.75
மொத்த பொறுப்புக்கள்		226,417,456.46	179,600,089.86
தேறிய சொத்துக்கள்		254,433,967.67	603,518,821.38
தேறிய சொத்துக்கள் / சம பங்கு			
ஒத்திவைக்கப்பட்ட வருமானம்– திறைசேரி மானியம்		595,232,238.83	514,054,873.20
ஏனைய இருப்புக்கள் – சொத்த மறுமதிப்பீட்டு இருப்பு	18	12,015,807.00	12,015,807.00
திரட்டப்பட்ட உபரி /பற்றாக்குறை	19	52,081,705.58	77,448,141.18
மொத்த தேறிய சொத்துக்கள் /சமபங்குகள்		659,329,751.41	603,518,821.38

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகம்

நிதிச் செயலாற்றுகை அறிக்கை

2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான

	குறிப்பு	2018	2017
		ரூபா.சதம்	ரூபா. சதம்
வருமானம்			
திறைசேரியின் பங்களிப்பு	20	133,612,634.37	134,878,943.61
ஏனைய வருமானங்கள்			
பாடநெறிக் கட்டணம்	21	1,571,500.00	4,802,662.00
மண்டபத்திற்கான வாடகை		18,553,241.50	6,370,175.00
வெளியீடுகளின் விற்பனை		434,654.50	618,280.00
முதலீடுகளின் வருமானம்	22	31,856,460.09	31,944,464.48
கடனிலிருந்து வட்டி		667,962.13	626,400.73
வாடகை	23	16,413,920.17	8,522,121.13
குத்தகை வாடகை		1,655,058.83	1,655,058.33
நன்கொடை (UNDP)			3,871,700.36
முதுகலைப் பட்டப்படிப்பிற்கான பாடசாலை		17,487,414.44	20,679,500.02
மொழித் திட்டம்		10,875,500.00	7,104,450.00
ஆலோசனைக் குழு	24	33,805,397.26	137,482,019.51
நிறுவனப் பங்கு வருமானம்		16,782,713.75	-
பலவித வருமானம்	25	18,631,860.82	4,142,770.91
மொத்த வருமானம்		302,348,317.86	362,698,546.08
செலவுகள்			
தனிநபர் ஊதியங்கள்	26	100,923,950.47	87,053,813.18
ஊழியர் நலன்	27	3,869,863.80	4,794,399.71

பயண மற்றும் வாழ்வாதாரக் கொடுப்பனவுகள்	28	4,393,844.63	9,260,683.06
பயன்பாடு மற்றும் பிற சேவைகள்	29	36,630,134.29	35,393,023.40
போக்குவரத்து	30	3,913,840.52	4,847,841.41
நிலையான சொத்துக்களின் பழுதுபார்ப்பு மற்றும்பராமரிப்பு	31	5,459,151.92	7,517,313.15
வழங்கு பொருள் மற்றும் தேவைகள்	32	9,493,108.15	10,910,556.37
நிதிக் கட்டணங்கள்	33	3,609,058.04	4,383,941.00
நூலக சேவைகள்	34	431,271.50	364,945.00
பயிற்சி மற்றும் மதிப்பீடு	35	1,756,600.85	7,743,538.45
வெளியீடு மற்றும் தகவல் சேவைகள்	36		208,054.00
வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் ஆய்வுச் சுற்றுப்பயணங்கள்	36a	59,111,650.38	46,413,155.28
தேய்மானம்	37	39,720,093.64	37,148,051.70
முதுகலைப் பட்டப்படிப்புப் பாடசாலை	38	7,793,566.08	5,630,763.15
ஆங்கிலத் திட்டம்	39	3,916,965.00	2,859,500.00
ஆலோசனைகள்	40	33,805,397.36	65,751,394.79
இழப்புகள் மற்றும் பதிவழித்தல் –TOT		-	11,736,078.22
பணிக்கொடை வழங்குதல்		3,223,949.00	2,513,632.70
நிச்சயமற்ற பெறுதல்களுக்கான ஏற்பாடு		447,852.08	1,476,400.00
வெளியீடுகள் செலவுகள்		268,498.50	650,808.00
மொத்த செலவுகள்		318,768,796.21	346,657,892.57
காலத்திற்கான உபரி / (பற்றாக்குறை)		(16,420,478.35)	16,040,653.51

13. கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

PED 55 ஆம் இலக்க பொதுத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க, கணக்காய்வுக் குழுவானது, அந்தக் குழுவிற்குத் தலைமை தாங்கும் திறைசேரியின் பிரதிநிதி அடங்கலாக சுயாதீன நிறைவேற்று அல்லாத ஆளுநர் சபை அங்கத்தவர்கள் பேரைக் கொண்டுள்ளது.

2018 ஆம் ஆண்டுக்காக ஆளுநர் சபையினால் பின்வருவோர் கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டனர்:

• திரு. பீ.பி.எஸ்.சீ. நோனிஸ்	கட்டுப்பாட்டாளர் நாயகம்/குழுவின் தலைவர் கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகம், நிதி அமைச்சு
• எஸ்.ரீ. கொடிகார முதல் நியமிக்கப்பட்டார்)	செயலாளர், உள்நாட்டலுவல்கள் அமைச்சு (ஆளுநர் சபைக் கூட்டத்தில் 08.06.2018 ஆந் திகதி
• திரு. கமல் பத்மசிரி	செயலாளர், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
• திரு. கே.டி.டி.கே. டி ஆப்ரு இராஜினாமாச் செய்துள்ளார்)	ஆளுநர் சபை அங்கத்தவர் (22.05.2018 ஆந் திகதி
• டி. ஏ.ரீ. மகேந்திர ரத்னசேகர	ஆளுநர் சபையின் அங்கத்தவர்

கூட்டம்

2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான குழுவின் செயலாளராக உள்ளகக் கணக்காய்வாளர் பணியாற்றினார். அந்த வருடத்தில் 3 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் கணக்காய்வுக் குழுக் கூட்ட அறிக்கைகள் சபைக்கு தொடர்ச்சியான முறையில் அனுப்பபப்பட்டது. அரசாங்கத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக 04 ஆவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்படவில்லை என்பதுடன் நிறுவனத்திற்கான சபை அங்கத்தவர்கள் முன்மொழியப்படவில்லை. கணக்காய்வாளர் அதிபதித் திணைக்களத்தின் பிரதிநியொருவரான கணக்காய்வு அத்தியட்சகர் எம்.ஆர்.ஆர்.கே. மல்லவ அவர்கள் இதில் அவதானிப்பாளராகப் பங்கேற்றார். அது தவிர, பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் அவதானிப்பாளராகப் பங்கேற்றார். விசேட விடயங்களில் கணக்காய்வுக் குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக பணிப்பாளர் நாயகத்திற்கும் சிரேஃ்ட முகாமைத்துவத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

2018 நிதியாண்டில் மூன்று சந்தர்ப்பங்களில் கணக்காய்வுக் குழு கூடியதுடன் அவர்களின் வருகை பின்வருமாறு காணப்பட்டது.

பெயர்	2017		
	மார்ச் 19	ஜூலை 04	செப்டம்பர் 26
திரு. பீ.பி.எஸ்.சீ. நோனிஸ்	√	√	√
திரு. எஸ்.ரீ. கொடிகார (ஆளுநர் சபைக் கூட்டத்தில் 08.06.2018 ஆந் திகதி முதல் நியமிக்கப்பட்டார்)	-	√	√
திரு. கமல் பத்மசிரி	√	-	√
திரு. கே.டி.டி.கே. டி ஆப்ரு (22.05.2018 ஆந் திகதி இராஜினாமாச் செய்துள்ளார்)	√	-	-
டி.ஏ. விஜித் மஹேந்திர ரத்னசேகர	-	-	-

பணி மற்றும் வகிபாகங்கள்

குழுவின் உசாவுகை விடயம் 2010.12.24 ஆந் திகதிய ீநுனு 55 ஆம் இலக்க பொதுத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க வரைவிலக்கப்படுத்தப்படுகின்றது. நிதி அறிக்கைப்படுத்தல், உள்ளக நிருவாகம், உள்ளக மற்றும் வெளிக் கணக்காய்வு போன்றவை தொடர்பில் ஆளுநர் சபையின் பொது நோக்கின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு குழு உதவுகின்றது.

உசாவுகை விடயம்

55 ஆம் இலக்க பொதுத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க ஆளுநர் சபை அங்கத்தவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள குறிப்பான உசாவுகை விடயங்களின் மூலம் குழு நிருவகிக்கப்படுகின்றது. உசாவுகை விடயங்களுக்கும் அரசாங்கத்தின் தேவைகளுக்கும் இணங்க தமது புதிய பொறுப்புக்களை நிறைவேற்றும் போது பின்வரும் குறிக்கோள்கள் தொடர்பில் குழு கவனம் செலுத்தும்.

அ. உள்ளகக் கணக்காய்வு அலகின் பொறுப்புக்களைத் தீர்மானித்தலும் வருடாந்த கணக்த் திட்டங்களை மீளாய்வு செய்தலும்.

ஆ. நிறுவனத்தின் அனைத்துச் செயற்பாடுகளுக்குமான உள்ளக நிருவாகத் தொதகுதிகளை மீளாய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

இ. செலவுப் பயனுறுதிக்காகவும் வீண் விரயங்களைக் குறைப்பதற்காகவும் குறிப்பான கால இடைவெளிகளுக்குள் செயலாற்றுகையை மீளாய்வு செய்தல்.

ஈ. வெளிவாரியான கணக்காய்வாளர்களுடன் தொடர்பை ஏற்படுத்துதலும் கணக்காய்வாளர் அதிபதியின்.. வெளிவாரியான கணக்காய்வாளர்களின் முகாமைத்துவக் கடிதங்கள் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுத்தலும்.

உ. அரசியலமைப்பு, ஒழுங்குவிதிகள், சட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு ஒத்திசைவாகச் செயற்படுவதை உறுதி செய்தல்.

ஊ. கணக்கீட்டுத் தரநியமங்களுடன் இணக்கமாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல்.

எ. உள்ளகக் கணக்காய்வு.. வெளிவாரியான கணக்காய்வு அறிக்கைகளையும் முகாமைத்துவக் கடிதங்களையும் மீளாய்வு செய்து பதில் நடவடிக்கைகள் எடுத்தல்.

ஏ. பொதுத் தொழில்முயற்சிகள் குழுவின் சிபாரிசுகளை.. கட்டளைகளை நடைமுறைப்படுத்துதல் மீளாய்வு செய்தல்

ஐ. குழுவினால் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியது, நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அல்லது மேம்படுத்தப்பட வேண்டியது என்று கருதும் எந்தவொரு விடயத்தையும் ஆளுநர் சபைக்கு அறிவித்தல்.

ஒ. ஆண்டறிக்கையில் உள்ளடக்குவதற்காக குழுவினால் கண்டுபிடிக்கப்பட்டவை தொடர்பில் அறிக்கை தயாரித்தல்.

நிதி அறிக்கைப்படுத்தல்

தரப்பினர்களுக்கு வழங்கப்படும் தகவல்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக நிதி அறிக்கைப்படுத்தல் முறைமையின் பயனுறுதித் தன்மை குழுவினால் மீளாய்வு செய்யப்படும். கணக்கு ஏடுகளிலும் இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு இணங்க உள்ளபடியானதும் நீதியானதுமான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான ஆளுநர் சபையின் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக குழு ஆளுநர் சபைக்கு உதவும். அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் சரியாகவும் முழுமையாகவும் கணக்கு ஏடுகளில் பதியப்படுவதுடன் நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதற்காக உள்ளக நிர்வாகத் முறைமையினதும் செயலொழுங்கு விதிகளினதும் போதியதன்மையும் பயனுறுதித் தன்மையும் குழுவினால் மீளாய்வு செய்யப்படுகின்றன.

குழுவினால் அனைத்து காலாண்டுக்குமான கணக்காய்வு செய்யப்படாத இடைக்கால நிதிக் கூற்றுகளையும் தயாரிக்கும் போது செய்யப்பட்ட முக்கியமான எடுகோள்களும் தீர்மானங்களும் அடங்கிய உதவித் தகவல்கள் மீளாய்வு செய்யப்பட்டன.

உள்ளக நிர்வாகம்

கணக்காய்வுக் குழுவினால் 2017 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைப்படுத்தலின் போது உள்ளக நிருவாகத்திலுள்ள பயனுறுதித் தன்மை மதிப்பிட்பபட்டது.. இந்தச் செயற்பாடுகள் மூலம் உள்ளக நிர்வாகச் செயற்பாடுகள் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் ஒத்திசைவாக அமைந்துள்ளதை உறுதிப்படுத்துவதில் காணப்படும் அபாயச் சாத்தியங்களை நிர்வகிக்கும் செயற்பாடுகளின் போதியதன்மை மற்றும் பயனுறுதித் தன்மை மதிப்பிடப்படுகின்றது. உள்ளகக் கணக்காய்வாளர்களால் வழங்கப்படும் சிபாரிசுகளின் அடிப்படையில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் உள்ளகக் நிருவாக முறைமையின் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துவதற்காக முகாமைத்துவத்தினால் பொறுத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை இக்குழு உறுதிப்படுத்தும். உள்ளகக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டு ஆளுநர் சபை தனது செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கும் தேவையான நடவளை எடுப்பதற்கும் உதவுகின்றது.

உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு செய்யப்படும் செயற்பாடுகளின் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் சுயாதீனமாக மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும் பக்கச் சார்பின்றியும் உரிய தொழில்சார் முறையிலும் அது மேற்கொள்ளப்படுவதையும் கணக்காய்வுக் குழு சான்றுப்படுத்தும். இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயற்பாடுகளின் விடயப் பரப்பு, வளங்கள் மற்றும் பயனுறுதித் தன்மை என்பன கணக்காய்வுக் குழுவினால் மேற்பார்வை செய்யப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டது.

பீ.பி.எஸ்.சீ. நோனிஸ்
தலைவர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

பணிப்பாளர் நாயகம்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது நியதிகளுக்கேற்ப 2018 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குவிதித் தேவைப்பாடுகள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 தகுதியுடைய அபிப்பிராயம்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் 2018 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த நிதிக் கூற்று மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றம் தொடர்பான கூற்று மற்றும் அத் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான பணப் பாய்ச்சற் கூற்று மற்றும் று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகளின் சாராம்சம் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்துக்கான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154(1) இன் ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கக்கூடியகணக்காய்வானது 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் எனது கட்டளைகளுக்கு கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் உறுப்புரை 154(6) ஆம் ஏற்பாடுகளின் பிரகாரம் எனதறிக்கை உரியகாலத்தில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது கருத்துப் படி, எனது அறிக்கையின் தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படை என்ற பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவுகள் தவிர்த்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் 2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலை மற்றும் அத்திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் நிதிப் பாய்ச்சல் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயமானதுமான பார்வையை வழங்குகின்றது என்பது நான் கொண்டுள்ள அபிப்பிராயமாகும்.

1.2 தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படை

(அ) இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தர நியமங்கள்

i. தர நியம இலக்கம் 02 இன் 09 ஆம் பந்திக்கு ஏற்ப கையிருப்பில் தக்க வைத்துள்ள வைப்பிடப்படாத கிடைப்பனவுகள் ரூபா. 525,555 ஆன பணத் தொகை மற்றும் பணத்திற்குச் சமனானவைகள் நிலுவையில் குறிப்பிடாது பணி மூலதனத்தில் ஏற்பட்டுள்ள மாற்றமாகக் காட்டப்பட்டுள்ளது.

ii. தர நியம இலக்கம் 07 இன் 14 ஆம் பந்திக்கு ஏற்ப சொத்துக்களை கணக்கிடுதலானது அதன் செலவின் அல்லது கடற்கடவுப் பெறுமானம் உண்மையாக அளவிட முடியுமாக இருத்தல் வேண்டும். ஆனால் ஒப்பந்தங்கள் 4 இன் பெறுமதி ரூபா.15,228,514 ஆகும். அதற்கு பொறியியலாளரின் பரிந்துரையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு முதலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) கணக்கியல் குறைபாடுகள்

i. விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்கள் நடாத்துவதற்குப் பதிலாக 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டுள்ள ரூபா.8,158,986 ஆன தொகையில், ஏற்க முடியாதுள்ள எஞ்சிய தொகையின் செலவு ரூபா. 1,036,804 இற்கு உரித்தான நிறுவனங்களுக்கு மீளச் செலுத்தாமல் நடப்பாண்டில் வருமானமாக கணக்கிடப்படுகின்றது.

ii. பட்டப்பின் பட்டப் பிரிவு மற்றும் மொழிப் பிரிவுக்கு கிடைக்கப் பெற வேண்டியுள்ளதாக காட்டப்பட்டுள்ள ரூபா.12,195,650 ஆன தொகையை முறைசார்ந்த அனுமதியின்றி கணக்கிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. இதனால் மீளாய்வு ஆண்டில் ஏற்பட்ட குறைபாட்டினைஅவ் அளவிலிருந்து அதிகரித்துக் காட்டியுள்ளது.

(இ) தெளிவுபடுத்தப்படாத மாற்றங்கள்

நிதிக் கூற்றுக்களுக்கு ஏற்ப 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு நிலையான சொத்துக்களின் மொத்த செலவு ரூபா. 777,612,380 தொகையாகும் ஆனால் விஸ்தீரன அட்டவணைக்கு ஏற்ப ரூபா. 786,743,302 கொண்ட தொகையாகும். அதற்கிணங்க ரூபா. 7,130,922 ஆன தொகையில் மாற்றம் அவதானிக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்விடல் தர நியமங்களுக்கிணைவாக இக் கணக்காய்வு நடத்தப்பட்டுள்ளது. அத்தகைய தரநியமங்களின் கீழுள்ள எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளன. எனது தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு நான் பெற்றுக் கொண்ட கணக்காய்வு சாட்சியம் போதுமான தென்றும் பொருத்தமான தென்றும் நான் நம்புகிறேன்.

1.3 முகாமையினதும் நிதிக் கூற்றுக்களுக்கான நிர்வாகத்துக்கு பொறுப்பானவர்களதும் பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள்இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படக்கூடிய பிறழ்கூற்றேதும் இல்லாது நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியப்படும் உள்ளக கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பதும் முகாமையின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கையில் நிறுவனத்தை (going concern) தொடர்ந்திருப்பதற்கான அதன் இயலுமையை தீர்மானிப்பது முகாமையின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் நிறுவனத்தைகலைப்பதற்கு உத்தேசிக்குமாயின் அல்லது வேறு மாற்றீட்டு நடவடிக்கை இல்லாதிருந்தாலும் கண்காணிப்பினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் தவிர்ந்த தொடர்ந்தேர்ச்சியான இருப்பினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடுதல் மற்றும் நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைப்புத் திறனுக்குரிய விடயங்களை தெளிவுபடுத்தப்படுத்துவதும் முகாமையின் பொறுப்பாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, ஆளுகைக்கு பொறுப்பானவர்களால்மேற்பார்வை செய்யப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவுக்கேற்ப நிறுவனத்தின் வருடாந்த நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதன் சொந்த வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை நிறுவனம் பேணிவர வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்த நிதிக் கூற்றிலும், மோசடி அல்லது தவறினாலான முக்கிய பிறழ் கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் அறிக்கைகையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர்மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும் குறித்த கணக்காய்வு இலங்கை கணக்காய்விடல் தரநியமங்களுக்கமைவாக நடத்தப்பட்டதாக உத்தரவாதப் படுத்தப்படாது. அவ்வாறே, ஏதாவது பிறழ் கூற்றுகள் இருந்தால் அது தொடர்பாக கண்டறியப்படும். பிறழ் கூற்றுக்களில் மோசடி அல்லது தவறிலிருந்து ஏற்பட முடியுமென்பதுடன், தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது கூட்டாகவோ நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தவதாயின் அவை முக்கியமானவை.

இலங்கை கணக்காய்விடல் நியம தரங்களுக்கேற்ற விதத்திலான கணக்காய்வின் ஒரு பகுதியென்ற வகையில் நான் கணக்காய்வு முழுவதிலும் தொழில்சார் நீதியை பிரயோகிப்பதுடன் தொழில்சார் சந்தேகங்கள் நிலவுவதாகவும் காணப்படுகின்றது.மேலும்,

- நான், மோசடி அல்லது தவறின் காரணத்தினாலான நிதிக் கூற்றுக்களின் முக்கியமான பிறழ் கூற்றின் ஆபத்துக்களை இனங்கணல் அல்லது மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பங்களின் போது உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துக்களை விடுவித்துக் கொள்வதற்கும், போதிய மற்றும் உசிதமான கணக்காய்வுச் சாட்சியங்களைப் பெற்றுக் கொள்வதற்கு எனது அபிப்பிராயத்தின் அடிப்படையாகவும் உள்ளது. , மோசடியின் விளைவினாலான ஆனால் கண்டறியப்படாத முக்கிய பிறழ் கூற்றின் ஆபத்தானது தவறினாலான ஆபத்தினை விடவும் மிகவும் உயர்வானது. ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதிக்கும், உள்நோக்குடைய புறக் கணிப்புக்களுக்கும், பிறழ் கூற்றுக்களுக்கும் அல்லது உள்ளக கட்டுப்பாடு மீறப்படுவதற்கும் காரணமாக அமையும்.

- நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் வினைதிறன் தொடர்பாக கருத்தினை முன்வைக்கும் நோக்கத்திற்கல்லாது, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயன்முறைகளை திட்டமிடுவதற்காக கணக்காய்வுக்குரிய உள்ளக கட்டுப்பாடு தொடர்பான விளக்கத்தினை நான் பெற்றுக்கொள்கிறேன்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப் பாட்டினையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்துவத்தையும் முகாமையினால் வெளிப்படுத்தப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களையும் நான் மதிப்பீடு செய்கிறேன்.

- நிறுவனமாக தொடர்வதற்குஇயலுமையில் குறிப்பிடத்தக்க சந்தேகம் ஏற்படுத்தும் நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய முக்கியமான நிச்சயமற்ற தன்மை காணப்படின், கணக்கீட்டின் இயங்கும் நிறுவனம் அடிப்படையை முகாமை பயன்படுத்தும் விதத்துக்கேற்பவும் பெற்றுக் கொண்ட கணக்காய்வு சான்றின் படியும் முடிவெடுக்கிறேன். முக்கியமான ஏதொவொரு நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக நான் முடிவெடுத்தால் நிதிக் கூற்றுக்களில் தொடர்புடைய வெளிப்படுத்தல்களுக்கான எனது கணக்காய்வாளர் அறிக்கையில் உரிய கவனம் செலுத்துமாறு வேண்டிக் கொள்ளப்படுவதுடன், அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதியளவில் இல்லாதிருந்தால் எனது கருத்தை மாற்றுமாறு நான் வேண்டப்படுவேன். எனது முடிவுகள் யாவும் எனது கணக்காய்வு அறிக்கையின் திகதி வரையில் நான் பெற்றுக் கொண்ட

கணக்காய்வு சான்றின் அடிப்படையிலேயே இருக்கும். எனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைகள் நிறுவனம் இயங்கும் நிறுவனமாக தொடர்வதிலிருந்தும் நிறுத்தப்படுவதற்கு காரணமாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களின் முன்வைப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதோடு,அதற்கு அடிப்படையான பரிவர்த்தனைகளையும் நிகழ்வுகளையும் உசிதமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருப்பாக மதிப்பிடப்பட்டள்ளது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டிலிருந்த குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளடங்கலாக ஏனைய விடயங்களுடன் குறிப்பிடத்தக்க கணக்காய்வு தேடல்கள் தொடர்பாக சாட்டப்பட்டுள்ளவர்களுடன் நான் கலந்துரையாடுகிறேன்.

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குவிதி தேவைப்பாடுகள் தொடர்பானஅறிக்கை

கீழுள்ள தேவைப்பாடுகளுக்காக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பான விசேட நிதி ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- எனது அறிக்கையில் தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவு தவிர்த்து, கணக்காய்வுக்கும் அவ்வாறு எனது பரிசோதனையின் போது அவசியமானவை என தோன்றிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்னால் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) ஆம் பிரிவின் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், அவற்றுக்கேற்ப சிறந்த கணக்கீட்டு பதிவுகள் பேணப்பட்டன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாட்டுக்கேற்ப நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஒத்திசைவாக உள்ளது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாட்டுக்கேற்ப முந்திய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளையும் உள்ளடக்கியே நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நிறைவேற்றப்பட்ட செயன்முறைகள் மற்றும் பெற்றுக் கொண்ட சான்றின் அடிப்படையில் மற்றும் போதியளவிலான விடயங்களுக்கு வரையறை செய்வதன் மூலம், பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களை முன்வைக்கும் அளவுக்கு எதுவும் எனது அவதானத்திற்கு உட்படவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வின் 12 (ஈ) பிரிவின் தேவைப்பாட்டுக்கேற்ப நிறுவன ஆளும் குழுவின் எவரேனும் உறுப்பினர் அத்தகைய நிறுவன வியாபாரத்தின் சாதாரண ஏதுக்கு அப்பால் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பாக நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளாராவென கூறுவதற்கும்.

- கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தவிர்த்து, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வின் 12 (ஊ) பிரிவின் தேவைப்பாட்டுக்கேற்ப ஏதேனும் ஏற்புடையதான எழுத்திலான சட்டத்துடன் அல்லது கம்பனியின் ஆளும் குழுவினால் வழங்கப்பட்ட பொது மற்றும் விஷேட பணிப்புகளுடன் இணங்கியொழுக வில்லை என கூறுவதற்கும்.

சட்ட விதிகளும் ஏற்பாடுகளுக்கும் குறிப்பீடு	விபரம்
(அ) 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்துடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (2) ஆம் பிரிவு	ஏற்பாடுகளுக்கு ஏற்ப நிறுவனத்தின் மீளாய்வு வருடத்தின் செயலாற்றுகை அறிக்கை வருடாந்த நிதிக் கூற்றுடன் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ) 2017 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க வருமான வரிச் சட்டம்	ஊழைக்கும் போதே செலுத்தப்பட வேண்டியவ வரி உழைத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்குப் முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு அனுப்பப்பட வேண்டும் என்றாலும், மீளாய்வு வருடத்தின் ஜுன் மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரை குறைக்கப்பட்டிருந்த ரூபா. 596,023 ஆன தொனை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.
(இ) தாபன விதிக்கோவையின் XV அத்தியாயத்தின் 10.4 ஆம் பிரிவு மற்றும் 10.8 ஆம் பிரிவு	வெளிநாட்டுச் செல்வதற்காக 10 நாட்களுக்கு முன்னர் அமைச்சரிடமிருந்து அனுமதியைப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்தும் இரு அலுவலர்கள் வெளிநாட்டுப் பயணத்திற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்காத நிலையில் அவர்கள் வெளிநாட்டுக்கு பயணித்துள்ளார்கள்.
(ஈ) அரச நிதிச் சுற்றறிக்கை	
i. 2015 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதிய இலக்கம் 01/2015/01 இனைக் கொண்ட சுற்றறிக்கை	வெளிநாட்டு அரசு அல்லது நிதியுதவியளிக்கும் நிறுவனத்தினால் தங்குவதற்காக மாத்திரம் வசதிகள் வழங்கும் சந்தர்ப்பத்தில் உணவு குடிபானங்களுக்காக இணைந்த கொடுப்பனவிலிருந்து நூற்றுக்கு 35 வீதத்தினை மாத்திரம் செலுத்துதல் வேண்டும். என்றாலும் அதனுடன் ஒத்திசைவற்றதாகக் காணப்படும் நிறுவனத்தின் அலுவலர்கள் 11 பேருக்காகவும் ஏனைய நிறுவன அலுவலர்கள் 166 பேருக்குமாக ரூபா. 4,115,324 ஆன தொகை (அமெ.டொ. 23,788) இனை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.
ii. 2015 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 14 ஆந் திகதிய மற்றும் 03/2015 ஆம் இலக்கத்துடைய சுற்றறிக்கை	இடைக்கால கட்டுநிதிக்கு உரித்துடைய பணிகள் நிறைவு செய்தவுடனே வாசிக்கப்பட வேண்டியிருந்தும், மீளாய்வு ஆண்டின் போது 19 சந்தர்ப்பங்களில் பாடநெறிக் கட்டணங்கள் மற்றும் செலவுகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா. 794,405 ஆன முற்பணத் தொகையை தீர்த்து வைக்கும் போது 10 நாட்கள் தொடக்கம் 209 நாட்கள்

	வரையான காலப்பகுதியைக் கொண்ட தாமதம் ஏற்பட்டுள்ளதாக காணப்பட்டுள்ளது.
iii. 2003 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28 ஆந் திகதிய மற்றும் PED/17 ஆம் இலக்கத்துடைய அரச வணிகச் சுற்றறிக்கை	அலுவலர்கள் வெளிநாடு செல்வதற்கு முன்னர் அரச வணிக பணிப்பாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் ஆனால் மாதிரிச் சோதனைகளுக்கு ஏற்ப 15 சந்தர்ப்பங்களில் 224 ஆம் அலுவலர்களின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு உரித்தான அனுமதியினைப் பெற்றிருக்கவில்லை.
(உ) 1978 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத்துடைய பொதுத் திறைசேரி சுற்றறிக்கை	பெறுமதி ரூபா. 56,743,886 ஆக அமைந்த நிலையான சொத்துக்கள் தொடர்பான சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய ஆவணமொன்றினை பேணிச் செல்லல் அல்லது தொகுக்கப்பட்டுள்ள ஆவணத்தை இற்றைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.
(ஊ) 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 02 ஆந் திகதிய PED/17 ஆம் இலக்கத்துடைய அரச வணிகச் சுற்றறிக்கை	
i. 5.24 ஆம் பிரிவு	வரைவிடப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதியியல் ஆண்டு ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே கட்டுப்பாட்டுச் சபைக்கு அனுமதிக்காக முன்வைக்கப்படுதல் வேண்டும் என்பதோடு ஆனால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, 2018 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதியே அனுமதிக்கப்பட்டுள்ளது.
ii. 6.5.3 ஆம் பிரிவு	வருடாந்த அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களினுள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் என்றாலும் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை கணக்காய்வு தினம் வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வின் 12 (எ) பிரிவின் தேவைப்பாட்டுக்கேற்ப கம்பனி அதன் தத்துவங்களையும், தொழிற்பாடுகளையும் மற்றும் கடமைகளையும் நிறைவேற்றவில்லை என கூறுவதற்கும்இ

தத்துவங்கள், தொழிற்பாடுகள், கடமைகள்	**அவதானங்கள்**
1982 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தை நிறுவுவதற்கான சட்டம் வரையாகவுள்ள நோக்கங்களுக்கு ஏற்ப நிறுவனத்தினால் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.	நிறுவனத்தின் நோக்கம் அல்லது செயற்பாடுகள் அற்ற மற்றும் நிறுவனத்தின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உரித்தற்ற வினைத்திறன் காண் தடை தாண்டற் பரீட்சைகள் 78 இனை நடப்பாண்டில் நடாத்தப்பட்டது என அவதானிக்கப்பட்டுள்ளது.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத்துடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பின்வரும் விடங்கள் அவதானிப்புக்கள் தவிர்ந்த நிறுவனத்தின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்ததாக குறிப்பிட்ட காலப்பகுதியினுள் உரித்துடைய சட்ட விதிகளுக்கு ஏற்புடையதாக பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு பயன்படுத்தப்படவில்லை எனவும்.

முகாமைத்துவச் செயற்பாடுகள்

2013 ஆம் ஆண்டு 19 ஆம் திகதி மற்றும் අමෙ/13/0237/523/001 ஆம் இலக்கத்துடைய அமைச்சரவை தீர்மானத்தின் படி இரண்டாம் நிலை கல்வி ஊழியர்களுக்கு நூற்றுக்கு 50 வீதமான இரண்டாம் நிலைக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆந் திகதியன்று பொது வணிகச் செயற்குழுவின் கட்டளைக்கு ஏற்ப இக் கொடுனவிற்காக மாதாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய குறைந்த பட்ச மணித்தியாலங்களின் அளவு 45 மணித்தியாலமாக காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய,

- மாதாந்தம் 45 மணித்தியால வரையறுக்கு உட்பட்டிருக்காத விரிவுரையாளர்களின் குறைந்த மணித்தியால எண்ணிக்கைக்காக அறவிடல் ஏதும் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக நிறுவனத்துக்கு 2018 ஆம் ஆண்டின் முதல் 06 மாதங்களினுள் ரூபா. 1,433,300 ஆன தொகை இழக்கப்பட்டிருந்தது.

- இலங்கை நிர்வாக சேவைக்கு 2017 ஆம் ஆண்டில் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 104 அலுவலர்களுக்கான சேவைத் துவக்கப் பயிற்சிப் பாடநெறிக்கான செயற்பாட்டு மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது வெளிவாரி விரிவுரையாளர்களின் விரிவுரை 2,034 மணித்தியாளங்கள் மற்றும் உள்ளக விரிவுரையாளர்களின் விரிவுரை மணித்தியாலங்கள் 1,854 இனையும் உள்ளடக்கி மொத்த விரிவுரை மணித்தியாலங்கள் 3,888 இற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. என்றாலும் உண்மையாக உள்ளக விரிவுரை மணித்தியாலங்கள் 1,080 ஆகும். எனவே அது நூற்றுக்கு 58 வீதமான அளவுடையது மற்றும் வெளிவாரி விரிவுரையாளர்களின் விரிவுரை மணித்தியாலங்கள் 1,650 ஆகும். அது நூற்றுக்கு 81 வீதமாகவும் பேணிச் செல்லப்பட்டதன் காரணமாக பணிகளை நிறைவேற்றும் போது வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாகவும் வெளிவாரி விரிவுரையாளர்களின் பங்களிப்பு கீழ் மட்டத்தில் நிலவியதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது.

3. ஏனைய கணக்காய்வு அவதானங்கள்

இலங்கை நிர்வாக சேவையின் (2014.'.2016) திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்களுக்கான சேவைத் துவக்கப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது தொடர்பில் அமைச்சுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் நிறுவனத்தின் பதவியணியனரின் பங்களிப்பு (விரிவுரைக் கட்டணம்) மற்றும் நிறுவனக் கட்டணம் அறவிடப்படாமல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. என்றாலும், பயிற்சியாளர்களுக்காக நடாத்தப்பட்ட மொடியுள் பயிற்சிகளை நடாத்துவதற்குப் பதிலாக ரூபா. 1,387,390 ஆன தொகையை அறவிடப்பட்டிருந்ததோடு, அவற்றில் நிறுவன அலுவலர்களுக்கு ரூபா. 960,245 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

டப்ளியூ. பி.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் நாயகம்